Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு + II = 14 விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247 (c-2203)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 19 (03.11.2004) புதன்கிழமை இதழ்: 34

# பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னர் எந்த நிதியுதவியும் கிடையாது!

## கொழும்பில் அகாஷி திட்டவட்டமாக தெரிவிப்பு

(கொழும்பு)



**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கத் தொடங்கிய பின்னரே – ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகளை வழங்க முடியும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி கொழும்பில் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**

**நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று மாலை இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.**

அவர் புதுடெல்கியில் இந்திய அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாகவும் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கோ அல்லது பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கோ தாங்கள் தடையாக இல்லை என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் உதவி வழங்கும் உலக நாடுகளும் ஸ்தாபனங்களும் உறுதியளித்த நிதியுதவியை வழங்குமாறும் ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்தது.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் பலாபலன்கள் மக்கள் அனுபவிக்கத் தொடங்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நான்காயிரம் பேருக்கு மீட்புநிதி மீளளிப்பு!

(கிளிநொச்சி)

மூப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட நான்காயிரம் பேருக்கு தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாக விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

கடன் மீளளிப்புக்கு தெரிவுசெய்யப்பட்டோரின் விபரங்கள் நாளைமுதல் நமது ஈழநாட்டில் வெளிவரும்.

## ஜனாதிபதி சந்திரிகா இன்று இந்தியா விஜயம்

(புதுடெல்கி)

சமாதான முயற்சிகள் மற்றும் இருதரப்பு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக இந்தியத் தரப்பினர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

ஐந்து நாட்கள் இந்தியாவில் தங்கவுள்ள ஜனாதிபதி சந்திரிகா இன்று புதுடெல்கி செல்லவுள்ளார் எனத் தெரியவருகிறது.

நாளை இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங் தேசிய பாதுகாப்பு ஆலாசகர் ஜே.என்.டிக்ஸிற், ஆகியோரை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாளை மறுதினம் ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி, வெளிவிவாகர அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் ஊரடங்கு அமுல்!

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - காத்தான்குடியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் சித்தி ஹம்சியா என்ற 15 வயது சிறுமி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதிகளில் கூட்டமாகக் கூடி நின்றவர்களைக் கலைப்பதற்காக பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தற்செயலாக இவரது இடது கையில் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தவிர நேற்று காத்தான்குடி பகுதியில் கத்திக்குத்து உட்பட இரண்டு வன்முறைச் சம்பவங்களின்போது இருவர் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இதன் காரணமாக காயமடைந்தோரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுடெல்கி புறப்பட முன்னர்

# சமாதான முயற்சிகள் குறித்து ரணிலுடன் சந்திரிகா சந்திப்பு!

(கொழும்பு)

இந்திய விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சமாதான முயற்சிகள் உள்ளிட்ட நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா நேற்று கலந்தாலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. உதவியாளர் எவருமின்றி இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இருவரும் நடைமுறை சமாதான நகர்வுகள் தொடர்பாக சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக கலந்துரையாடினர்.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இருவரும் ஆராய்ந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பேச்சுநடத்துவது

(12 ஆம் பக்கம் பார்க்க)

களைக் கலைப்பதற்காக பாதுகாப்பு கட மையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தற்செயலாக இவரது இடது கையில் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தவிர நேற்று காத்தான்குடி பகுதியில் கத்திக்குத்து உட்பட இரண்டு வன்முறைச் சம்பவங்களின்போது இருவர் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இதன் காரணமாக காயமடைந்தோரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இந்திய விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சமாதான முயற்சிகள் உள்ளிட்ட நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா நேற்று கலந்தாலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. உதவியாளர் எவருமின்றி இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இருவரும் நடைமுறை சமாதான நகர்வுகள் தொடர்பாக சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக கலந்துரையாடினர்.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இருவரும் ஆராய்ந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பேச்சுநடத்துவது

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி சந்திரிகா இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாளை மறுதினம் ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி, வெளிவிவாகர அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு உடன்படிக்கையால் இலங்கைக்கே அதிக நன்மை!

## இந்தியத் தளபதி கூறுகிறார்



(கொழும்பு)

விரைவில் கைச்சாத்திடப்படவிருக்கும் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு - இந்தியாவைவிட இலங்கைக்கே அதிகளவான நன்மையைப் பெற்றுக்கொடுக்கும் என்று கொழும்புக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ் தெரிவித்தார்.

நேற்றுக்காலை முப்படைகளின் தலைமை அதிகாரியும், கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் போதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் திகதி நிர்ணயம் செய்யப்படும் எனவும் ஜெனரல் விஜ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை நேற்றுமாலை இந்திய இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சு நடத்தினார். அத்துடன், பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாகர்கோவில் களமுனையில் ராகவன், நியூட்டன் நினைவு நிகழ்வு

(நாகர்கோவில்)



ஓயாத அலைகள் - 3 வெற்றிச் சமரின் ஐந்தாம் ஆண்டு நிறைவும் - இந்தச் சமரில் முதலில் வீரகாவியமான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப்.கேணல் ராகவன், தாக்குதல் . தளபதி லெப்.கேணல் நியூட்டன் ஆகியோரின் நினைவு நாள் நிகழ்வும் நேற்றுக்காலை நாகர்கோவில் களமுனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி லெப்.கேணல் கோபித் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்ற, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் ஏற்றினார்.

திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் முத்தழகு, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தாக்குதல் தளபதி பிரதாபன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மலர்மாலையினை சாள்ஸ் அன்ரணி (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## யாழ். மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப்
பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை
ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

# க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும் யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.

## யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/ வரணி மகாவித்தியாலயம்.
03. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/ மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/ மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/ குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ ஹாட்லிக் கல்லூரி
05. யா/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/ வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/ புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
12. யா/ ஞானசாரியார் கல்லூரி.
13. யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ இராமனாதன் கல்லூரி.
02. யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/ உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/ அருணோதயாக் கல்லூரி.
05. யா/ யூனியன் கல்லூரி.
06. யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/ விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/ வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/ மானிப்பாய் மெமோறியல்.
11. யா/ இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா∴ சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா∴ சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/ புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/ நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/ நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/ மத்திய கல்லூரி.
11. யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.
17. யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/ இந்து மகளிர் கல்லூரி.
20. யா/ இந்துக் கல்லூரி.
21. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பாடசாலை பரீட்சாத்திகளும் தனிப்பட்ட பரீட்சாத்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

## யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

COMMERCIAL BANK Our Interest Is In You

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில்

Global Info IDM (PVT) LTD., Authorized ICT Education JAFFNA CENTER IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

S.T.P 73,பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302,கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Softview Computer College 43, Arasady Road,Thaddatheru Junction, Jaffna

## கிளிநொச்சி மாவட்டத்தில் கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | - பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | - முழ்ங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம் | - ஜெயபுரம் அ.த.க.பாடசாலை |
| 04. | பளை | - பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | - தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | - முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | - வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | - இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன | - அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 10. | இரணைமடு | - கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | - கனகபுரம் மகாவித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | - கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | -பிரமந்தனாறு மகாவித்தியாலயம் |


## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பகுதியின் ஏற்பாட்டில் - இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் - யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ்.சூசை கருத்துரை வழங்குவார்.

## திருத்தி வாசிக்கவும்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தால் நடத்தப்பட்டுவரும் கண்காட்சி நிகழ்வு தொடர்பாக நேற்று நமது ஈழநாட்டுடன் இணைகப்பட்டிருந்த இலவச சிறப்பிதழில் கண்காட்சி குறித்த கருத்துக்கள் பகுதியில் கண்காட்சிக்குழுத் தலைவர் குமாரசாமி விசாகன் - பௌதீகவியல்துறை 3 ஆம் வருட மாணவன் எனத் தவறுதலாக இடம் பெற்றுவிட்டது.

இந்தக் கண்காட்சிக்குழுத் தலைவர் பேராசிரியர் வ.கந்தசாமி என அறியத்தருவதோடு இது குறித்து எமது இலவச சிறப்பிதழில் வெளியான தவறுக்கு வருந்துகிறோம்.

# பல்கலை ஊழியர் சங்க சேவைநலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவராக இருந்து 2003 /2004 ஆண்டு காலப்பகுதியில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களையும், மற்றும் இக்காலப்பகுதியில் 25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் முதன்மை விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தமிழ் விழா

பெரியபுலம் மகாவித்தியாலயம் தமிழ்மன்றம் நடாத்தும் தமிழ்விலா இன்று முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாணவி சஞ்சிகா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந் தன் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார்.

## படையினர் நிலைகொண்டிருந்த வீடு உரிமையாளரிடம் ஒப்படைப்பு

நீர்வேலிப் பகுதியில் படையினர் நிலைகொண்டிருந்த பொதுமகன் ஒருவரின் வீடு, மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்து உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

நீர்வேலிச் சந்திக்கு அண்மையில் என்.தங்கேஸ்வரி என்பவரின் வீட்டில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர். வீட்டைப் பெற்றுத் தருமாறு வீட்டு உரிமையாளர் கடந்த ஆண்டு 3 ஆம் மாதம் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு, இராணுவத்தினர் முதலில் வீட்டு வாடகை தருவதாகக் கூறினர். பின்னர் - மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உரிமையாளரிடம் இராணுவத்தினர் வீட்டை ஒப்படைத்தனர்.


## சிறு விளம்பரம்

**இனிப்புவகை தயாரிக்க பெண் தொழிலாளர் தேவை**

இனிப்புவகை, கச்சான் அல்வா, மிக்சர் என்பன தயாரிக்க அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். பாரதி சிறுகைத் தொழில் நிலையம், இல.19, சம்பியன்லேன், கொக்குவில் (972)

நாதன்ஸ் சினிமா
(குளிரூட்டப்பட்டது)
காலை 11.00 மணி (பு.நே) காட்சியாக
அன்னை காளிகாம்பாள்
மாலை 2.30, 6.30 (பு.நே) அக்கினிக் கவிதைகளின் புத்திரனாம் பாரதியின் வாழ்க்கைச் சரிதம். முதன் முறையாக ஈழமண்ணுக்கு ஒரு எழுச்சிச் சித்திரம். நான்கு தேசிய விருது வென்ற ஒப்பற்ற காவியம்.
பாரதி
(C/3319) கா.நேரம்:- 2.30; 6.30; 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
இது ஒரு உண்மைக் கதை
பு.நே 10.30, 2.30,6.30,9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
ராஜ்கிரன் நடித்த
கொஞ்சிப்பேசலாம் (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
DARE DRAVIN
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45, (பு.நே)
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

# அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவில் விடுதலைப் புலிகள் ஊடுருவல்!

## புலனாய்வுப் பிரிவு கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் நன்கு பயிற்றப்பட்ட உளவாளிகள் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவில் ஊடுருவியுள்ளதாக அரசாங்கப் படைகளின் புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி, இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குறிப்பிட்ட அமைச்சர்கள் சிலரின் விபரங்களைத் திரட்டுமாறு விடுதலைப் புலிகளால் நன்கு பயிற்றப்பட்ட 20 தொடக்கம் 25 வரையான உளவாளிகள் வன்னியிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொழும்புக்கு வந்த இவர்கள், அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினருடன் நண்பர்களாகியுள்ளனர். அவர்களின் பாதுகாப்புடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பங்குபற்றும் நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றனர்.

இந்த உளவாளிகள் நன்கு சிங்கள மொழி பேசக் கூடியவர்கள். இவர்கள் பாதுகாப்புப் பிரிவிலுள்ள சிலரின் தனிப்பட்ட செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களில் சிலர் விடுதலைப் புலிகளின் உளவாளிகளுடன் வியாபார ரீதியிலும் பங்காளிகளாக உள்ளனர்.

இந்த உளவாளிகளும், பாதுகாப்புப் பிரிவினரும் ஒவ்வொரு நாட்களும் சந்தித்து வருகின்றனர். இவ்வாறு இவர்கள் சந்திக்கும் இடங்கள் மற்றும் விருந்து நடைபெறும் இடங்களை அரச உளவுப் பிரிவினர் பெற்றுள்ளனர்.

அத்துடன், இந்தப் பாதுகாப்புப் பிரிவினர் மேலதிக பயிற்சிகளுக்காகச் செல்லாது, அவர்கள் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினருடன் தனியாக உல்லாசப் பிரயாணங்களுக்குச் சென்று வருகின்றனர். இவ்வாறு பாதுகாப்புப் பிரிவினர் பயிற்சிக்குச் செல்லாதபோது, விடுதலைப் புலிகளின் உளவாளிகள் அந்தப் பயிற்சியில் கலந்து கொள்கின்றனர்.

எனவே விடுதலைப் புலிகளின் உளவாளிகளுக்கும், பாதுகாப்புப் பிரிவினருக்கு மிடையே உள்ள ரகசியத் தொடர்புகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுமாறு அரச உளவுப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

# அடுத்த ஆலோசனைக் கூட்டத்தில் ரணிலும் பங்கேற்பாராம்!

## சந்திரிகா நம்பிக்கை



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக தாம் சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

சமாதானம் தொடர்பான தேசிய ஆலோசனை சபையின் அரசியல் குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய அவர், அடுத்து வரும் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பங்குகொள்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

போர்நிறுத்த உடன்பாடு சமாதான நகர்வுக்கு முனைப்பை கொடுத்துள்ளது. நாட்டின் நிரந்தர சமாதானத்துக்காக அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானம் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசுவதற்கு எந்த நேரத்திலும் தயார் எனத் தெரிவித்திருந்த போதிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன பங்கேற்கவில்லை.

# மேலுமொரு இலங்கையர் ஈராக்கில் கடத்தப்பட்டார்!

ஈராக் தலைநகர் பக்தாத்தின் அல்-மன்சூர் பகுதியில் வைத்து மேலுமொரு இலங்கையர் தீவிரவாதிகளால் பிடித்துச் செல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒரு அமெரிக்கர், இரு அரபுக்கள் மற்றும் ஒரு இலங்கையர் என நான்கு பேர் பக்தாத்தில் வைத்து பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஒரு காவலாளியும், ஒரு கடத்தல்காரரும் பலியானதாகப் பக்தாத்திலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரியான பொப் கலகான் தெரிவித்தார்.

## இரவு விடுதி மீதான தாக்குதல்

# அமைச்சருக்கு தொடர்பிருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜே.வி.பி கோருகிறது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இரவு விடுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன், பிரதி அமைச்சர் மேவின் சில்வா தொடர்புபட்டிருந்தால் அவரையும், சம்பந்தப்பட்டவர்களையும் கைதுசெய்து சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஜே.வி.பி கோரியுள்ளது.

அரசியல் ஒழுக்க நெறியை உருவாக்குவதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரை மக்கள் தெரிவு செய்தனர். அரசியலை மழுங்கடிக்கும் விதத்தில் செயற்பட ஜே.வி.பியினர் அனுமதிக்கப் போவதில்லை என்று, மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாட்டாளரான பியசிறி விஜயநாத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து, தாங்கள் கவலையடைவதாகவும் ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை - இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தமது பெயரைத் தொடர்புபடுத்துவது ஆதாரமற்றது என்று பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

# சூறாவளி குறித்துவெளியான செய்தியில் உண்மையில்லை

## வானிலை அவதானிப்பு நிலைய பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த 70 நாட்களுக்குள் வட-கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் பெரும் புயல் தாக்கக் கூடுமென, ஊடகங்களில் வெளிவந்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென வானிலை அவதான நிலையப் பணிப்பாளர் ஜயதிலக பண்டா தெரிவித்தார்.

தற்போது வங்காள விரிகுடாவில் பல குழப்பமான நிலைமைகள் உள்ளன. எனவே இந்தக் காலப் பகுதியில் அது இலங்கையையும் தாக்கலாமென்ற அச்சமொன்று உள்ளது.

இது தொடர்பாக வானிலை அவதான நிலையத்தின் மற்றொரு பணிப்பாளர் தர்மரட்ண தெரிவித்ததாவது -

இலங்கையில் சூறாவளித் தாக்கும் காலம் தொடங்கிவிட்டது. இதன் தொடர்ச்சி அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இருக்கும். எனவே இந்த சூறாவளியின் தாக்கம் இலங்கையில் எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை எமது நிலையம் கவனமாகக் கண்காணித்து வருகிறது.

இலங்கையில் சூறாவளி தாக்கும் வருவதென்றாலும், கிழக்கு கடற்கரையை அண்டிய பகுதியால் வந்து, மேற்குக் கடற்கரையால் மறைந்துவிடும். அத்துடன் சூறாவளிக் காலத்தில் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலுள்ள கடல் கொந்தளிப்பாக காணப்படும். மீனவர்கள் தொழிலுக்குச் செல்லக் கூடாதென எச்சரிக்கப்படுவர்.

அத்துடன், கடும் மழை, கடும் காற்று இதனால் வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப்படும், இதனைவிட பெருமளவில் வெள்ளப் பெருக்கு என்பன ஏற்படும். இதனால் கடற்கரையோரங்களில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுவர்.

புயலொன்று ஏற்படுமாக இருக்குமானால், அதனை ஏழு நாட்களுக்கு முன்னரேயே எம்மால் தெரியப்படுத்த முடியும்.

இன்னமும் உறுதியான தகவல் என்றால் 48 மணி நேரத்துக்கு முன்னரேயே எம்மால் வழங்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

# தமிழக மீனவர்கள் 5 பேரையும் அனுராதபுரம் சிறையில் தடுத்துவைக்க உத்தரவு

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேரையும், அனுராதபுரம் சிறையில் தடுத்துவைக்குமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த மாதம் 3 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 5 விசைப்படகுகளையும், அதிலிருந்த 5 ஓட்டுநர்களையும் கடற்படையினர் கைதுசெய்தனர்.

காரைநகரிலுள்ள கடற்படையினரின் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 5 மீனவர்களும் - நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இந்த 5 மீனவர்களையும் அனுராதபுரம் சிறையில் தடுத்துவைக்குமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டது. 5 விசைப்படகுகளையும் காரைநகரிலுள்ள கடற்படையினரின் முகாமில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# கடைசி இராணுவ அணியும் ஹெய்டிக்குப் புறப்பட்டது

ஹெய்டியில் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் இணைந்து கொள்வதற்கான இலங்கை இராணுவத்தின் கடைசி அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச்சென்றது.



ஹெய்டியில் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையினர் சார்பில் பணியாற்றிய 750 பேர் கொண்ட இராணுவ அணி ஒன்றை அனுப்புவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்திருந்தது.

இதன்படி ஐக்கிய நாடுகளின் வழிகாட்டலை பயிற்சியை முடித்த பின்னர் ஏற்கனவே இரண்டு தொகுதிகளாக, இலங்கைப் படையினர் ஹெய்டிக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

இவர்கள் அங்கு பணியில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை - இறுதி இராணுவ அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

13 அதிகாரிகளும், 296 படையினரும் இறுதி அணியில் இடம் பெற்றிருந்தனர். இவர்களை இராணுவ உயர் அதிகாரிகள் விமான நிலையத்தில் வழி அனுப்பிவைத்தனர்.

# சமாதானப் பேச்சுக்களை விரைவுபடுத்த ஜேர்மன் அரசு வலியுறுத்தவேண்டும்!

## கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைபை மையமாகக் கொண்டு, இலங்கையில் தேக்க நிலையில் காணப்படும் சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜேர்மன் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள ஜேர்மனியத் தூதுவராலயத்தில் இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்துப் பேசினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர். ஜேர்மன் தூதுவருடன் அரசியல் செயலாளர் ஏட்நம் ஜங்கும் கலந்துகொண்டார்.

இங்கு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் தெரிவிக்கையில் -

சமாதானப் பேச்சு, ஏறக்குறைய ஒன்றரை வருடத்துக்கு மேலாக தேங்கிக் கிடக்கிறது. இதனால் ஒருவேளை யுத்த நிறுத்தத்துக்குப் பாதிப்பு ஏற்படவும் கூடும். எனவே இதனைக் கவனத்திற் கொண்டு ஜேர்மனிய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ரோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு நிதி உதவியாக வழங்கவுள்ள 4.5 பில்லியன் ரூபா நிதியுதவிகளை பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் மாத்திரமே வழங்க முன்வர வேண்டும். ஜேர்மனி நாட்டில் இலங்கையில் இருந்து அதிகளவாக தஞ்சமடைந்த தமிழ் மக்களை திருப்பி அனுப்புதல் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

# பரிசுத் தினம்

யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலய பரிசுத் தினமும், பாராட்டு நிகழ்வும் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## பங்களாதேஷ் அணியுடனான

# முதலாவது ஒருநாள் போட்டியில் 138 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றி



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து அணி 138 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷுக்கு விஜயம் செய்திருக்கும் நியூஸிலாந்து அணி- 2 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்றது. இதையடுத்து மூன்று ஒருநாள் போட்டிகளிலும் விளையாடி வருகிறது.

சிட்டகொங்கில் நேற்று முதலாவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் நியூஸிலாந்து அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

நியூஸிலாந்து அணிக்கு பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சாளர்கள் பெரிதும் நெருக்கடியையே கொடுத்தனர்.

பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களால் சீரான முறையில் நியூஸிலாந்து வீரர்கள் வீழ்த்தப்பட்டனர். பல்ரன் 9 ஓட்டங்களுடனும், அஸ்ரல் 27 ஓட்டங்களுடனும், மார்ஷல் 7 ஓட்டங்களுடனும், 50 ஓட்டங்களை அணி பெறுவதற்குள் ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் ஸ்ரைரிஸ் 43 ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார். மக்மிலன் 17 ஓட்டங்களுடனும், மக்கலம் 8 ஓட்டங்களுடனும் பங்களாதேஷ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.



இதையடுத்து வந்த கெய்ன்ஸ் அதிக பந்துகளை எதிர்கொண்டாலும், அதிகளவில் சிக்ஸர்களை அடித்து ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அதேநேரம் ,அடுத்த முனையில் வீரர்கள் ஒவ்வொருவராக வீழ்ந்துகொண்டிருந்தனர்.

ஹரிஸ் 5 ஓட்டங்களுடனும், வெற்றோரி 12 ஓட்டங்களுடனும், அடம்ஸ் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

கடைசியாக கெய்ன்ஸும் ஆட்டமிழந்ததையடுத்து நியூஸிலாந்து அணி 224 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

49.2 ஓவர்களிலேயே நியூஸிலாந்து ஆட்டமிழந்தது. கெய்ன்ஸ் 1 பவுண்டரி, 5 சிக்ஸர்களுடன் 74 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் நஜ்முல் ஹுசைன் 4 விக்கெட்டுக்களையும், பாஸ்யா, ராணா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ரபீக் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நியூஸிலாந்தின் பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தள்ளாடியது. அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.

இதனால் 86 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் - 138 ஓட்டங்களால் படுதோல்வி கண்டது.

இந்த அணி சார்பில் ஹபிபுல் பஷார் மட்டுமே அதிகபட்சமாக 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மில்ஸ் 7 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், வெற்றோரி 3 விக்கெட்டுக்களையும், ஸ்ரைரிஸ் 2 விக்கெட்டுக்களையும், ஹரிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# மக்மிலன் நீக்கப்பட்டார்!

அவுஸ்ரேலியா செல்லும் நியூஸிலாந்து அணியில் இருந்து மக்மிலன் நீக்கப்பட்டுள்ளார். நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இந்த மாதம் அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சுற்றுப் பயணத்துக்கான நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அவுஸ்ரேலியா பயணத்தின்போது மக்மிலனின் பெயர் பரிசீலிக்கப் படுவதாக கிரிக்கெட் சபை அறிவித்தது. ஆனால் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்டில் ஆடிய ஹமிஸ் மார்ஷல் சிறப்பான ஓட்டம் எடுத்ததை அடுத்து மக்மிலன் தேர்வுசெய்யப்படவில்லை.




# சுவிஸ் இன்டோர் ரெனிஸ்; நோவாக் சம்பியனானார்!



(பசெல்)

சுவிஸ் இன்டோர் ரெனிஸ் தொடரில் செக் குடியரசின் ஜெர்ரி நோவக் சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.

சுவிற்சர்லாந்தில் உள்ள பசெல் நகரில் சுவிஸ் இன்டோர்ஸ் ரெனிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டி ஞாயிறறுக்கிழமை நடைபெற் றது. இதில் ஆர்ஜென்ரீனாவின் டேவிட் நள்பாந்தியன், செக்குடியரசின் நோவக்கை எதிர்த்து விளையாடினார்.

இரு வீரர்களும் மாறிமாறி செட்களைக் கைப்பற்ற கடும் போட்டி நிலவியது. இறுதியில் நோவக் 6-7, 6-3, 6-4, 1-6, 6-2 என்ற நீண்ட செட்களில் வெற்றிபெற்று சம்பியன் படடத்தைக் கைப்பற்றினார்.

# ஏரிபி ரெனிஸ் போட்டி; ரஷ்ய வீரர் சம்பியன்!

ஏரிபி ரெனிஸ் தொடரில் ரஷ்யாவின் மிகைல் யுசானி சம்பியன் பட்டம் வென்றார்.

ரஷ்யாவிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் நகரில் முன்னணி ரெனிஸ் வீரர்கள் பங்கேற்கும் ஏரிபி ரெனிஸ் தொடர் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் இறுதிச் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் யுசானி சுலோவாக்கியாவின் கரோல் பெக்கை எதிர்த்து விளையாடினார். சுமார் 62 நிமிடங்கள் மட்டுமே நடந்த இப்போட்டியில் யுசானி 6-2, 6-2 என்ற நேர்செட்களில் கரோல் பெக்கை எளிதில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

# இந்தியாவில் டெஸ்ட் தொடர்; அவுஸ்ரேலியா 2008 இல் வரும்

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை போர்டர் - கவாஸ்கர் கோப்பைக்கான இந்திய - அவுஸ்ரேலிய டெஸ்ட் போட்டி நடைபெறுவதை உறுதிப்படுத்தவேண்டுமென அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் பாப் மெர்ரிமன் தெரிவித்துள்ளார். ஆஷஸ் தொடரைப் போன்று போர்டர் – கவாஸ்கர் தொடரும் நடைபெறவேண்டும்.

தற்போது ஐ.சி.சி., பரிசீலனையில் உள்ள அட்டவணைப்படி டெஸ்ட் போட்டிக்காக அவுஸ்ரேலியா 2010 ஆம் ஆண்டில்தான் இந்தியா வரும். இந்த அட்டவணைக்கு இந்தியாவும் அவுஸ்ரேலியாவும் இதுவரை ஒப்புதல் தெரிவிக்கவில்லை.

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு அணியும் இன்னொரு அணியின் நாட்டுக்குச் சென்று விளையாட வேண்டும். அதன்படி 2008 இல் அவுஸ்ரேலிய அணி மீண்டும் இந்தியா வந்து விளையாடும்.

ஒவ்வொரு நான்கு ஆண்டு இடைவெளியில் நாங்கள் இந்தியா செல்லவேண்டும். அதே இடைவெளியில் இந்தியா அவுஸ்ரேலியா வரவேண்டும். இதன்படி இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, போட்டிகள் நடைபெற வேண்டும்.

இதுதான் கிரிக்கெட் ரசிகர்களுக்கு சரியாக இருக்கும். அவர்கள் இதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். 2001 ஆம் ஆண்டிலும் இந்தியாவில் இதே போன்ற வரவேற்பு இருந்தது.

2008 ஆம் ஆண்டில் நாங்கள் மீண்டும் இந்தியா வருவது அதை உறுதி செய்வதாக இருக்கும்.

இவ்வாறு மெர்ரிமென் தெரிவித்தார். 2007 ஆம் ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியா செல்லும்.

# மும்பை டெஸ்ட் போட்டியிலிருந்து கங்கூலி அதிகாரபூர்வமாக நீக்கம்



(புதுடெல்கி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இருந்து இந்தியக் கப்டன் கங்கூலி அதிகாரபூர்வமாக நீக்கப்பட்டார். காயம் காரணமாக அவதிப்பட்ட கங்கூலி நாக்பூர் டெஸ்ட் போட்டியிலும் ஆடவில்லை.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அவரிடம் உடல் தகுதி பரிசோதனை நடத்தப்பட்டது. இந்தப் பரிசோதனையில் கங்கூலி தேறவில்லை.

இதையடுத்து அவர் கடைசிப் போட்டியில் இருந்து நீக்கப்படுவதாக இந்திய அணி நிர்வாகம் அறிவித்தது. கங்கூலியின் நீக்கம் காரணமாக உருவாகியிருக்கும் வெற்றிடத்தை தொடர்ந்து கை.்.வ் தக்கவைத்துள்ளார்.

பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின்போது கங்குலியின் வலது தொடையில் காயம் ஏற்பட்டது.

இந்தக் காயத்துடன் அவர் சென்னை டெஸ்டில் ஆடினார். ஆனால் வலி அதிகமான காரணத்தால் நாக்பூர் போட்டியில் களம் இறங்கவில்லை.

தற்போது இந்தக் காயம் தொடர்பாக சிறப்பு ஆலோசகர் ஒருவரை கங்கூலி சந்திக்கவிருக்கிறார். மும்பையில் இதற்காக அவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படவிருக்கிறது. இதன் பின்னர் கங்குலி தனது சொந்த ஊர் திரும்பத் திட்டமிட்டுள்ளார்.

# போயேவைக் கைதுசெய்ய புதுடெல்கி பொலிஸ் முயற்சி

சூதாட்டத்தில் சிக்கிய தென்னாபிரிக்க வீரர் போயேவை கைது செய்து விசாரணை நடத்த புதுடெல்கி பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச கிரிக்கெட்டை கதிகலங்கச்செய்த சூதாட்டப் பிரச்சினை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு கிளம்பியது. தென்னாபிரிக்க அணி இந்தியா வந்தபோது குரோஞே வுடன் சூதாட்ட முகவர் ஒருவர் பேசிய தொலைபேசி உரையாடல் சூதாட்ட விவகாரத்தை வெட்ட வெளிச்சமாக்கியது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக டெல்கி பொலிஸ் வழக்குப் பதிவு செய்துள்ளது. தென்னாபிரிக்க அணி கப்டன் குரோஞே, கிப்ஸ், போயே ஆகியோர் மீது வழக்குப்பதிவு செயயப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குரோஞே விமானவிபத்தில் மரணம் அடைந்து விட்டார். இதையடுத்து சூதாட்ட விவகாரம் தொடர்பாக கிப்ஸ் மற்றும் போயே ஆகியோரிடம் விசாரணை நடத்த டெல்கி பொலிஸ் முடிவு செய்திருந்தது.

இந்தியா வரும் போயேயை கைதுசெய்து விசாரணை நடத்த டெல்கி பொலிஸ் முடிவு செய்திருக்கிறது. இதற்கான வேலைகள் ரகசியமாக நடந்து வருகிறது.

இதுபற்றிய விபரங்கள் அனைத்தும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கு இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தற்போது போயே குழபபத்துடன் இருக்கிறார். இந்தியப் பயணத்தில் இருந்து விலகுவது பற்றியும் அவர் யோசித்து வருகிறார்.

இந்திய - தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் வரும் 20 ஆம் திகதி கான்பூரிலும், 2 ஆவது டெஸ்ட் வருகிற 28 ஆம் திகதி கொல்கத்தாவிலும் ஆரம்பமாகவுள்ளன.





பாகிஸ்தானில் நடைபெற்ற இலங்கையுடனான டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிந்ததையடுத்து இரு நாட்டு வீரர்களும் வெற்றிக்கிண்ணத்துடன் காணப்படுகின்றனர்.

# க.பொ.த (உ/த) இரசாயனவியல்

## பகுதி I

A.லோகநாதன் B.Sc.,Dip.in.Ed

1. பின்வருவனவற்றில் மின்னதிர் இயல் கூடிய மூலகம் எது?
i) AL ii)O iii) N iv) f v) Xe

2. இலத்திரனைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
i) ருதபோட் ii) மோஸ்லி iii) நியூட்டன்
iv) ஸ்ரோனி v) J.J.தொம்சன்

3. சடப்பொருட்களின் மின்தன்மைக்கு சான்று அல்லாதது?
i) மின்பகுப்பு ii) மின்முலாமிடல் iii) உரோஞ்சல் பரிசோதனை
iv) கதோட்கதிர் பரிசோதனை v) $KMno_4$ நீரில் கரைதல்

4) $Mg^{2+}$ இன் ஏற்றம் கூலோமில்
i) +2 ii) +1.6x10-19 iii) +2x1.6x10-19
iv) +12x1.6x10-19 v)+2x12

5) X என்ற மூலகம் பற்றி பொருத்தமற்றது எது? இதன் அனுவில்
i) 39 Pகள் உள்ளன ii) 19 N கள் உள்ளன
iii) 20 N கள் உள்ளன iv) 20 P கள் உள்ளன
v) (i), (ii), (iv) யாவும்

6. H அனுநிறமாலையில் Hβ கோடு தோன்றுவது $e^n$ கள்
i) n=2 → n=1 ற்கு வரும் போது
ii) n=3 → n=2 ற்கு வரும் போது
iii) n =4 → n=2 ற்கு வரும் போது
iv) n=4 → n=1 ற்கு வரும் போது
v) n=3 → n=1 ற்கு வரும் போது

7. a) லைமன் தொடர் UV பகுதியில் தென்படும்
b) பாமர் கோடுகளின் λ (அலைநீளம்) ஜவீட பாசன் கோட்டின் λ குறைவு
c) ஒரு தொடரில் சக்தி குறையும் திசையில் கோடுகள் நெருங்கிச் செல்லும் இவற்றுள் சரியானது/ சரியானவை?
i) a ii) b iii) a,b iv) b,c v)a,c

8. இலத்திரன் நிலையமைப்பில் 6 தனி $e^n$ களைக் கொண்டுள்ள மூலகத்தின் அனு எண் எது?
i) 29 ii)24 iii) 26 iv)16 v)8

9. ஓர் மூலக அனுவில் இறுதி $e^n$ நிலையமைப்பு ... $(n-l)d^{10},np^1$ ஆக உள்ளது. இது 4 ஆம் ஆவர்த்தன மூலகம் எனின் இந்த மூலகத்தின் அனு எண் எது?
i) 30 ii) 33 iii) 35 iv) 31 v) 49

10. X,Y ஆகிய மூலகங்களின் அனு எண்கள் முறையே 30,33 ஆகும்
a) x தொகுப்பு மூலகமாகும் b) y,p தொகுப்பு மூலகமாகும்
c) x,4 ஆம் ஆவர்த்தனமல்ல
d) y,5 ஆம் ஆவர்த்தனமாகும் சரியானவை
i)a,b ii) a,c iii) a,b,c iv) b,c v) a,b,d

11. நவீன ஆவர்த்தன அட்டவணை பற்றி பொருத்தமற்றது எது?
i) இதில் 6 ஆவர்த்தனங்கள் உள்ளன
ii) இதில் 7 ஆவர்த்தனங்கள் உள்ளன
iii) இது மூலகங்களின் இலத்திரன் நிலை (அனு எண்) வரிசையில் அமைந்தது.
iv) இது மூலகங்களின் அனுத்திணிவு ஏறுவரிசையில் அமைந்தது
v) 1 ஆம், 4 ஆம் விடைகள்

12. $CCl_4$ இல் C-Cl பிணைப்பு நீளம் 0.176nm காரியத்தில் C-C பிணைப்பு நீளம் 0.154nm எனின் cl இன் அனு ஆரை nm இல்?
i) 0.077 ii) 0.098 iii) 0.087 iv) 0.099 v)0.097

13. பின்வரும் எதில் இரு முனைவுத் திருப்பம் இல்லை (0) ஆகும்
i) HCℓ ii) NH3 iii) CHCℓ3 iv)CO2 v)CH3 Cℓ

14. $n^{3-},o^{2-},Mg^{2+}\ Na^+$ இவற்றின் அயன் ஆரையின் இறங்கு வரிசை?
i) Na+,$Mg^{2+}$, $O^{2-}$, N3- ii) N3-, $o^{2-}$, Na+, $Mg^{2+}$
iii) $N^{3-}$,$o^{2-}$,$Mg^{2+}$,Na+ iv) $Mg^{2+}$,$Na^+$,$o^{2-}$,$n^{-3}$
v) n3, Mg2+, o2, Na+

15. உருகுநிலை கூடிய மூலகம் பின்வருவனவற்றுள் எது?
i)N ii) Na iii) C iv) O v) Cℓ

16. அயன்களின் நகர்வினால் மின்னைக் கடத்தக் கூடியது எது?
i) ஈயக் கம்பி ii) பென்சிற் கரி iii) இரும்பு
iv) திண்ம NaCl v) $CaCl_2$ கரைசல்

17. பின்வருவனவற்றுள் H - band காணப்படாதது எது?
i) CH3 - O-CH³ ii) திரவ நீர் iii) NH3 வாயு
iv) $CH_3COOH$ v) (i) ஆம், (iii) ஆம்

18. அயன், பங்கீடு, ஈதல் இம் மூன்று பிணைப்புக்களும் கொண்டிருப்பது எதில்?
i)NaCℓ ii) $CH_4$ iii) $H_3O^+$
iv) $NH_4C\ell$ v) .1,2,3 இல்

19. எந்த மூலக்கூறு ஒரே தளத்தில் நான்கு அனுக்களைக் கொண்டிராதது?
i) BH4 ii)XeF4 iii)BCL3 iv) NH3 v) (ii), (iv) இல்

20. பின்வருவனவற்றில் எதன் மூலக்கூற்றுவடிவம் ஏனையவற்றில் இருந்து வேறுபட்டது?
i) $CH_4$ ii)$S_2O_3^{-2}$ iii)$10^{-10},10^{-13}$ iv)$10^{-13}, 10^{-13}$

21. அனு கரு ஆரை, அனு ஆரை என்பவற்றின் ஆரை வரிசை cm இல் முறையே
i)$10^{-8},10^{-13}$ ii) $10^{-13},10^{-8}$ iii) $10^{-10},10^{-13}$
iv)$10^{-13},10^{-10}$ v) $10^{-13}, 10^{-15}$

22) எதில் 3 ஆம் அயனாக்கற் சக்தி உயர்வானது?
i)Al ii)B iii)Ca vi)Mg v)N

23) $AX_2E_3$ இற்கு பொருந்தக்கூடியது எது?
i)$CH_4$ ii)$Al_2O_3$ iii) $ICl^-_2$ iv) $NH_3$ v) $ICl_3$

24) $K_2Cr_2o7$ இல் Cr இன் ஒட்சியேற்ற எண் என்ன?
i) 6 ii) 7 iii) +6 iv) +7 v) 0

25) பின்வரும் உருவில் H - நிறமாலையுடன் பொருத்தமானது எது?

இங்கே மடிக்கவும்



20) பின்வருவனற்றில் அமில இயல்பு கூடியது எது?
1. $H_2CO_3$ 2. HCL 3. $HCLO_4$ 4. $H_3PO_4$ 4. $CH_3COOH$

21) பின்வரும் எந்த ஐதரைட்டின் உருகு நிலை, கொதிநிலை குறைவாக காணப்படும்
1. $NH_3$ 2. $ASH_3$ 3. $PH_3$ 4. $BiH_3$ 5. $SdH_3$

22) மெய் வாயுக்கள் பின்வரும் எந்த நிபந்தனைகளில் இலட்சிய நடத்தையைக் காட்டுவதில்லை
1. உயர் வெப்பநிலை, தாழ் அமுக்கம்
2. உயர் அமுக்கம், தாழ் வெப்பநிலை
3. உயர் வெப்பநிலை, தாழ் அமுக்கம்
4. தாழ் வெப்பநிலை, தாழ் அமுக்கம்
5. உயர் வெப்பநிலையில் மட்டும்.

23) $H_2S + 2Na \rightarrow Na_2S + H_2$
1. Na ஒட்சியேற்றமையந்துள்ளது.
2. $H_2S$ ஒட்சியேற்றியாக தொழிற்பட்டுள்ளது
3. Na தாழ்த்தப்பட்டுள்ளது
4. 2 ஆம், 3 ஆம் சரியான விடைகள்
5. 1 ஆம், 2 ஆம் சரியான விடைகள்

24) $2SO2_{(g)} + O2_{(g)}\ \ 2SO3_{(g)}$ என்ற சமநிலைத் தாக்கத்தில் Kc இன் அலகு யாது?
1. Mol $dm^{-3}$ 2. $Mol^2dm^{-6}$ 3. $Mol^{-2}dm^3$ 6
4. $mol^{-1}dm^3$ 5. $(moldm^{-3})^2$

25) $AB_{4(g)} \rightarrow AB_{2(g)}\ \ 2SO_{2(g)}$ என்ற சமநிலைத் தாக்கத்தில் ←
Kc இன் அலகு யாது?
1. mol dm -3 2. mol2 dm6 3. mol-2 dm6
4. mol-1dm3 5. (mol dm-3)2

26) $AB_{4(g)} \rightarrow AB_{4(g)} = B_{4(g)}$ என்ற சமநிலையில் $AB_{4(g)}, AB_{4(g)}$ ←
என்பவற்றின் மூலம் பின்னங்கள் முறையே 0.6, 0.2 ஆகும். சமநிலையின் மொத்த அமுக்கம் 0.6 x 104$Nm^{-2}$ எனின், Kp இவ் வெப்பநிலை யாது?
1) 40 x $10^2Nm^{-2}$ 2) 1/4 x $10^2$ $Nm^{-2}$
3) /4 x $10^2$N-1$m^2$ 4) 4 x $10^2Nm^{-2}$
5) /4 x $10^2$N-1$m^2$

27) பின்வருவனவற்றில் ஆரையின் இறங்குவரிசையின் சரியான ஒழுங்கு யாது?
1) $O^2$,⟨ $mg^{2+}$, ⟨Ne 2) $O^{2-}$ ⟩ Ne⟩ $mg^{2+}$
3) $mg^{2+}$ ⟨ Ne ⟨ $O^{2-}$ 4) Ne ⟩ O2 ⟩ $mg^{2+}$
5) Ne ⟩ mg ⟩ O

28) படம்



என்ற மாற்றத்தின் ஆரம்ப படியாக அமைவது.
1) $CH_2CL=ALCL_3$ முக்கோணி
2) $CH_3$ - $CH_2$ CL= $ALCL_3$ முக்கோணி
3) $CH_3$ COCL = $ALCL_3$ முக்கோணி
4) ConH2sO + $COHNO_3$ முக்கோணி
5) பொருத்தமான விடை தரப்படவில்லை.

28) இரசாயனச் சமநிலை ஒன்றில் Kp,Kc பற்றி சரியானது/ சரியானவை எது/ எவை?
a) Kp வெப்பநிலையில் தங்கியுள்ளது.
b) Kp அமுக்கத்தில் தங்கியுள்ளது.
c) Kc வெப்பத்தில் தங்கியுள்ளது.
d) Kp செறிவில் தங்கியுள்ளது.

1) a,b,c 2) a,b,c,d 3) a மட்டும் 4) c மட்டும் 5) a,c மட்டும்.

29) $CH_3CH_2$- OH $CH_3$ $CH_2$ - COOH எனும் மாற்றத்தில் Aஉம் B



உம் முறையே
1) $CH_3$ CHO, $CH_3$ CN
2) $CH_3$ $CH_2$ CL, $CH_3$ CN
3) $CH_3$ CN, $CH_3$ $CH_2$ CL
4) $CH_3$ $CH_2$ CL, $CH_3$ $CH_2$ CN
5) $CH_3$ $CH_2$ CL, $CH_2$ - $CH_2$ -$CH_2$- OH

30) பென்சீனின் நைத்திரேற்றம்
1) ஒரு கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கமாகும்
2) இத்தாக்கம் ஒரு $e^n$ நாட்ட பிரதியீட்டுத் தாக்கமாகும்
3) இதில் $HNO_3$ அமிலமாகத் தொழிற்படும்
4) $NO_2$ ஒரு கருநாடியாகும்
5) இத்தாக்கம் ஒரு கருநாட்ட கூட்டற் தாக்கம் ஆகும்

## பகுதி II

1. $SP^2$ கலப்பில் ஈடுபடும் C அனு ஒன்றினால் பயன்படுத்தப்படும் ஒழுக்குகளை வரிப்படம் ஒன்றில் காட்டுக.

2. சக்கரக் கட்டமைப்பற்ற ஐதரோக்காபன் L ஆனது ஒன்றுடனொன்று இணைந்த C களை பின்வரும் ஒழுங்கில் கொண்டுள்ளது.




a) L இன் ஒவ்வொரு C அனுவினதும் (C1-C5) கலப்பு வகையைக் குறிப்பிடுக.
C1 = C2= C3= C4= C5=

b) l ன் கட்டமைப்பை எழுதுக.

A.லோகநாதன் B.Sc.,Dip.in.Ed

1) பின்வருவனவற்றுள் சார் அணுத் திணிவின் நவீன நியமம் எது?
1. $^{6}_{12}C$ 2. $^{6}_{14}C$ 3. $^{12}_{6}C$ 4. $^{14}_{6}C$ 5. $12^{C}$

2) இரண்டாம் ஆவர்த்தன மூலகங்களில் அதிகூடிய 1ம் அயனாக்க சக்தி கொண்ட மூலகம் எது?
1. He 2. Ar 3. Ne 4. c 5. f

3) $CH_3OH$ இன் 64 கிராமில் உள்ள H அணுக்களின் எண்ணிக்கை என்ன? (L - அவகாதரோவின் எண்)
1. 06 2. 12 3. 6 X L 4. 8 X L 5. 12/L

4) 1 மூல் Hexene இன் முற்றான தகனத்திற்கு தேவைப்படும் $O_{2(g)}$ இன் mol எண்ணிக்கை யாது?
1. 06 2. 02 3. 09 4. 9/2 5.18

5) 0.2mol $dm^{-3}$ Nacl நீர்க்கரைசலின் 250$cm^3$ உம் 0.1mol $dm^{-3}$ செறிவுடைய $CaCl_2$ நீர்க்கரைசலின் 250 $cm^3$ ஒன்றாக கலந்து பெறப்பட்ட கரைசலிலுள்ள $Cl_{(aq)}$ இன் செறிவு mol $dm^{-3}$ இல் யாது?
1. 0.4 2. 0.2 3. 0.6 4. 0.8 5. 08

6) பின்வரும் எச் சோடிகளைத் தாக்கம் புரிய விடுவதன் மூலம் வீழ் படிவாதல் முறையினால் பிசமானம் துணிய முடியும்.
1. $ALCL_3 + NaOH$ 2. $A_gNO_3 + NaCl$
3. $NaOH + HCL$ 4. $H_2SO_4 + NaOH$
5. $CU^{2+}(aq) + NH_4OH$

7) H அணு நிறமாலையில் பாமர் தொடரின் $H_p$ கோடு தோன்றுவது இலத்திரன்கள்
1. $n=2 \rightarrow n=1$ இற்கு வரும் போது
2. $n=3 \rightarrow n=2$ இற்கு வரும் போது
3. $n=3 \rightarrow n=2$ இற்கு வரும் போது
4. $n=4 \rightarrow n=2$ இற்கு வரும் போது
5. $n=4 \rightarrow n=1$ இற்கு வரும் போது

8) பின்வரும் எந்த மூலக்கூற்றில் 2 பிணைப்புச் சோடிகளும் 2 தனிச்சோடிகளும் $e^n$ கள் காணப்படும்.
1. $BeCl_2$ 2. $ICl_2$ 3. $^{+}BCl_4$ 4. $H_2S$ 5. $C_2H_2$

9) இலத்திரன் நிலையமைப்பு $ns^2np^3$ இல் காணப்படக்கூடிய மூலகம் எது?
1. Al 2. B 3. P 4. S 5. F

10) CuS, ZnS என்பவற்றின் நிறங்கள் முறையே
1. கறுப்பு, சிவப்பு 2. சிவப்பு, கறுப்பு
3. கறுப்பு, மஞ்சள் 4. கறுப்பு, வெள்ளை
5. மஞ்சள், கறுப்பு

11) பின்வருவனவற்றில் d தொடுப்பு மூலகமொன்றின் அணு எண்ணாக அமைய முடியாதது.
1. 22 2. 40 3. 42 4. 54 5. 24

12) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
a) இரண்டு S ஒழுக்குகள் மேற்பொருந்தி எப்போதும் *σ பிணைப்பு தோன்றும்
b) இரண்டு P ஒழுக்குகள் மேற்பொருந்தி எப்போதும் σ பிணைப்பு தோன்றும்
c) ஒரு S ஒழுக்கும் P ஒழுக்கும் மேற்பொருந்தி π பிணைப்பு தோன்றலாம்.
இவற்றுள் சரியானது
1. a, b 2. a, c 3. b, c 4. b,a 5. வேறுவிடை

13) 4 - Methyl pent - 2 ene என்பது பின்வருவனவற்றில் எதைக் காட்டக் கூடியது.
1. ஒளியியல் சமபகுதியம்
2. கேந்திர கணித சமபகுதியம்
3. நிலைச் சமபகுதியாம்
4. 2ம் 4ம் காட்டக்கூடியது.

14) a) $Al(OH)_3$, AgCl இரண்டும் வெள்ளை நிறம்
b) $K_2CrO_4$, CDS இரண்டும் மஞ்சள் நிறம்
c) CoS, Bi2$S_3$ இரண்டும் கறுப்பு நிறம்
d) SnS, $Sb_2S_3$ இரண்டும் செம்மஞ்சள் நிறம்
1. a, b 2 b,c,d 3. a,b,c 4. a,d 5. a,c,d

15) பின்வரும் ஐதரைட்டுக்களில் எது வேறு கூட்டத்திற்கு ரியது.
1. $PH_3$ 2. $BH_3$ 3. $NH_3$ 4. $BiH_3$ 5. $ASH_3$

16) $H = C \equiv C - C = + CH_2$ என்ற கட்டமைப்பில்
x y a b
சரியான கூற்று எது?
1. x, y காபன்கள் $SP^2$ கலப்பிற்குரியவை
2. a, b காபன்கள் SP கலப்பிற்குரியவை
3. x, y காபன்கள் $SP^3$ கலப்பிற்குரியவை
4. a, b காபன்கள் $SP^2$ கலப்பிற்குரியவை
5. 4 காபன்களும் நேர்கோட்டில் காணப்படும்

17) $CH_3 - CH_2OH \longrightarrow CH_2(OH) - CH_2(OH)$ என்ற மாற்றத்தில்
x → [X] → b
a,b,x என்பன முறையே
1. $a \rightarrow Al_2O_3 \overset{\Delta}{,} b \rightarrow CH_2 = CH_2$ X OH l $MnO_4$
2. $a \rightarrow CH_2 = CH_2$, $b \rightarrow Al_2O_3$, X $CH_2 = CH_2$
3. $a \rightarrow Al_2O_3$, $b \rightarrow$ OH l$MnO_4 \Delta X \rightarrow CH_2 = CH_2$
4. $a \rightarrow OH^{-1} Mno^{-}_4$, $b \rightarrow Al_2O_3$ X $CH_2 = CH_2$
5. $a \rightarrow$ Con$H_2SO_4$ 170, $b \rightarrow H - C \equiv C - HX \rightarrow OH^{-1}$ $MnO^{-}_4$ குளிர்

18) Zn மூலகத்திற்கு அடுத்து கீழ் உள்ள ஆவர்த்தனத்தில் Zn இற்கு நேர் கீழே உள்ள மூலகத்தின் அணு எண் யாது?
1. 40 2. 42 3. 38 4. 48 5. 50

19) இலசேயின் வடிதிரவத்தில் காணப்படாத அயன் எது?
1. CN 2. $S^{2-}$ 3. $C^{1-}$ 4. $P^{3-}$ 5. $^{-}OH$

இங்கே மடிக்கவும்



1. இரண்டாம் ஆவர்த்தன மூலகங்களில் அதிகூடிய 1 ஆம் அயனாக்கற் சக்தி கொண்ட மூலகம் எது? ....................

2. 3 ஆம் மூலகங்களில் அதிகுறைந்த 1 ஆம் அயனாக்கற் சக்தி கொண்ட மூலகம் எது? ....................

3. ஆவர்த்தன அட்டவணையில் உள்ள மூலகங்களில் அதிகூடிய 1 ஆம் அயனாக்கற் சக்தி கொண்ட மூலகம் எது? ....................

4. 3 ஆம் ஆவர்த்தன மூலகங்கள் சிலவற்றின் (x,y,z) 1 ஆம் அயனாக்கற் சக்தி அணு எண்ணுடன் மாறும் ஒழுங்கு பின்வரும் வரைபில் தரப்பட்டுள்ளது.




அ) X,Y,Z பெறக்கூடிய அணு எண்கள் எவை?
X= Y= Z=

ஆ) X,Y,Z இற்குப் பொருத்தமான குறியீடுகள் எவை?
X= Y= Z=

இ) X ஐ விட அணு எண் ஒன்று (1) குறைந்த மூலகம் M எனின் M, X இல் 1 ஆம் அயனாக்கற் சக்தி கூடிய மூலகம் எது? (* இங்கே X,Y,Z இவ் ஆவர்த்தனத்தின் முற்பகுதி மூலகங்கள் ஆகும் எனக் கருதி விடை தருக)

காரணம் தருக. இதற்காக பின்வரும் பந்தியின் வெற்றிடங்களைப் பூர்த்தியாக்குக.
M,X என்பனவற்றில் (இ) தரவின்படி M ஆனது .................. ம் கூட்ட மூலகமாகவும், X ஆனது .................. கூட்ட மூலகமாகவும் உள்ளது. M இன் இறுதி $e^n$ நிலையமைப்பு .................. ஆகவும், X இன் இறுதி $e^n$ நிலையமைப்பு .................. ஆகவும் காணப்படும். .................. $e^n$ நிலை ஆனது .................. $e^n$ நிலையைவிட உறுதி கூடியது. இதனால் $S^1$ இல் இருந்து 1 ஆம் $e^n$ ஐ அகற்றுவதற்கு .................. சக்தி தேவை. எனவே M இன் .................. ஐவிட X இன் $I_1$ .................. காணப்படுகின்றது.

5) A,L ஆகிய 2 ஆம் ஆவர்த்தன மூலகங்களின் முதல் 7 தொடர் அயனாக்கற்சக்திப் பெறுமானங்கள் வருமாறு
A= 1400, 2860, 4590, 7480, 9440, 53200, 64300 $KJmol^{-1}$
B= 1310, 3390, 5320, 7450, 11000, 13300, 71000 $KJmol^{-1}$
I) A இன் இறுதி ஒழுங்கில் எத்தனை $e^n$ கள் உண்டு?
II) L இன் இறுதி ஒழுக்கில் எத்தனை $e^n$ கள் உண்டு?
III) A எத்தனையாம் கூட்டம்?
iv) L எத்தனையாம் கூட்டம்?
v) A,L என்பவற்றில் $I_1$ கூடியது எது?
vi) காரணம் தருக.
....................................................................
....................................................................
....................................................................
....................................................................

6) பின்வரும் வரைபுகளில்
(அ) இல் N,O,F என்பவற்றின் ($I_1$) 1 ஆம் அயனாக்கற்சக்தி அணு எண்ணுடன் மாறும் முறையையும் (ஆ) இல் இம்மூலகங்களின் $I_1$ அணு எண்ணுடன் மாறும் முறையையும் வரைபு படுத்துக.

I (அ)



அணு எண்

II (ஆ)



அணு எண்

## மூலக்கூற்று வடிவங்கள்

1) பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| | மூலக்கூற்று வடிவம் | பிணைப்புச்சோடி $e^n$ களின் எண்ணிக்கை | தனிச்சோடி $e^n$ களின் எண்ணிக்கை | உ+ம் |
|---|---|---|---|---|
| 1. | தளமுக்கோணம் | | | |
| 2. | | | | CCl 4 |
| 3. | | 2 | 2 | |
| 4. | T வடிவம் | | | |
| 5. | | 4 | 2 | |
| 6. | See saw (சீசோ) | | | |
| 7. | முக்கோணக் கூம்பகம் | | | |
| 8. | | | | $B_eF_2$ |
| 9. | | | | $I_cl_2$ |
| 10. | எண்முகி | | | |

2) பின்வருவனவற்றின் மூலக்கூற்று வடிவங்களை உய்த்தறிக.

I. உய்த்தறிக
I) $SF_4$ .................... II) $PH_3$ ....................
iii) $Ncl_3$ .................... iv) $Icl_3$ ....................

ii
I) $Nh_4^+$ .................... II) $H_3o^+$ ....................
III) $^+CH_3$ .................... IV) $^+PCL_4$ ....................

iii
I) I $F_2$ .................... II) $^-PCL_6$ ....................
III) I $F_2$ .................... IV) $^-PCL_6$ ....................

# பல்கலைக்கழகங்களை மட்டும் மையமாகக்கொண்டு மாணவரின் கல்விச்செயற்பாடு அமையக்கூடாது!

## விரிவுரையாளர் சிவானந்தமூர்த்தி

(சுழிபுரம்)

மாணவர்களின் கல்வி பல்கலைக்கழகங்களை மட்டும் மையமாகக் கொள்ளாது, தற்போதைய நவீன தொழிநுட்ப மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

இவ்வாறு அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ்.பல்கலைக் கழக மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவானந்தமூர்த்தி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

இன்று மாணவரகளும், பெற்றோர்களும் பல்கலைக்கழகத்தை மையமாகவைத்தே தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இது மிகவும் தவறானதாகும். ஏனெனில் பெரும்பாலான மாணவர்களுக்கு பல்வேறு தொழிநுட்பத் துறைகளில் ஆர்வம் இருக்கும். எனவே அவ்வாறான மாணவர்களை அவர்களுக்கு ஏற்றதுறைகளில் ஊக்குவிக்க வேண்டும். இன்றைய நவீன வாழ்க்கைக்கு முக்கியமானதும் அதுவே ஆகும்.

வெறுமனே பல்கலைக்கழகங்களில் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டுப் படித்துப் பட்டம்பெற்றுவிட்டு, பின்னர் தான்கற்ற கல்விக்கும், தான் செய்யும் தொழிலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாமல் செயற்படுவதென்பது மூடத்தனமான செயற்பாடாகும். இதுவே இன்று நம் மாணவர்களிடையே நடைபெறுகிறது.

எனவே வெறுமனே பல்கலைக் கழகங்களுக்குச் செல்வதை மட்டுமே மையமாக வைத்துக் கற்காது, இன்றைய நவீன தொழிற்கல்வித் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பல்வேறு வகையான தொழில்நுட்பக் கற்கைகள், நுண்கலைக் கற்கைகள், கணினிக் கற்கை நெறிகள் போன்ற கற்கை நெறிகளிலும் மாணவர்கள் ஈடுபாடுகாட்டி, கற்றுத் தமதுவாழ்வில் முன்னேற வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் சங்கானைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம், யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். அத்துடன் கல்லூரி மாணவ, மாணவிகளின் நாடகம், சிறப்பு நாட்டுக் கூத்து, நடனம், போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (207)

# தொடரும் மழையால் கொட்டகைகளில் இயங்கும் பாடசாலைகள் பாதிப்பு

(மருதங்கேணி)

தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழைகாரணமாக, வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை காரணமாக வீதிகள் பாதிப்படைந்துவருவதால், போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுவருதாகவும், தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கிவரும் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் வீட்டு வசதி இல்லாதன் காரணமாகக் குடிசைகளில் வாழ்ந்துவரும் மக்கள பல அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (122)

# வடமராட்சி கல்வி வலயத்தில் 5 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்தில் 5 பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளன. இந்தப் பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கல்வி வலயத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், கரணவாய் தாமோதரம் வித்தியாலயம், வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை, புற்றளை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. (122)

# மருதங்கேணி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துறைசார்ந்த வாண்மை விருத்தி செயலமர்வு!

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கிவரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துறைசார்ந்த வாண்மை விருத்திச் செயலமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதிமுதல் வடமராட்சி கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இயங்கிவரும் செயலமர்வில் 21 முன்பள்ளிகளைச் சேர்ந்த 21 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் 16 முன்பள்ளிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும், 5 முன்பள்ளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இயங்கிவருகின்றன.

இந்த ஆசிரியர்களுக்கான 16 நாட்கள் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக நான்கு நாட்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டவுள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து இந்தப் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சை மீட்டல் வகுப்பு

வடமராட்சிக் கிழக்கு - மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் இந்தவருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் மற்றும் மீட்டல் கருத்தரங்கு வகுப்புகள் எதிர்வரும் 12,13,14 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி இ.த.க வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தக் கருந்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்குகளில் பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சாத்திகளும் கலந்தகொள்ளமுடியும். தமிழ் மாணவர் ஒன்றியமும், கிளிநொச்சி கல்வி வலயமும் இணைந்து இந்த மீட்டல் வகுப்புக்களை இந்த வருடம் நடத்தவுள்ளது.

இதேவேளை, இந்தப் பிரதேச மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் கடந்த 29 ஆம் திகதி முதல் நடைபெற்றுவருகின்றன (122)

# நவராத்திரி தினத்தை முன்னிட்டு வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நவராத்திரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் முதல்மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரம் வருமாறு-

**பேச்சுப்போட்டிகள்**

*(தரம் 2,3)*

1 ஆம் இடம் - ம.பிரசாந்தி, 2 ஆம் இடம் - சி.வைஷ்ணவி, 3 ஆம் இடம் - த.சுஜீவா.

*(தரம் 4,5)*

1 ஆம் இடம் - சி.நிஷாந், 2 ஆம் இடம் - பா.முகுந்தன், 3 ஆம் இடம் - சி.சிந்துயா.

*(தரம் 6,7)*

1 ஆம் இடம் - நா.சரூபியா, 2 ஆம் இடம் - தி.மயூரிக்கா, 3 ஆம் இடம் - நா.கபிலகுமாரி.

*(தரம் 8,9)*

1 ஆம் இடம் - ந.மதுர்சிகா, 2 ஆம் இடம் - சி.தவசீலன், 3 ஆம் இடம் - இ.சூரியகுமாரி.

*(தரம் 10,11)*

1 ஆம் இடம் - ச.கோமதி, 2 ஆம் இடம் - ஜெ.சாராசா ளினி, 3 ஆம் இடம் - நா.வாசுகி.

**சகலகலா வல்லிமாலை ஓதுதல் போட்டி**

*(தரம் 1)*

1 ஆம் இடம் - ஜெ.சுபாஷினி, 2 ஆம் இடம் - சி.டர்சிகா, 3 ஆம் - லோ.கயேந்தினி.

*(தரம் 2,3)*

1 ஆம் இடம் - பிரஷாந்தி, 2 ஆம் இடம் - சி.வைஷ்ணவி, 3 ஆம் இடம் - ஜெ.மிதுர்ஷினி.

*(தரம் 4,5)*

1 ஆம் இடம் - அ.யோகேஸ்வரி, 2 ஆம் இடம் - சி.சிந்துஜன், 3 ஆம் இடம் - சு.ஆதவன்.

*(தரம் 6,7)*

1 ஆம் இடம் - நா.சுரூபியா, 2 ஆம் இடம் - செ.றெஜினோல்ட், 3 ஆம் இடம் - சூ.பேரானந்தி.

*(தரம் 8,9)*

1 ஆம் இடம் - க.லதா, 2 ஆம் இடம் - இ.சூரியகுமாரி, 3 ஆம் இடம் - க.ஆனந்த்

*(தரம் 10,11)*

1 ஆம் இடம் - ச.கோமதி, 2 ஆம் இடம் - சு.விஜிதகலா, 3 ஆம் இடம் - சி.தர்ஷினி

மாலை கட்டுதல் போட்டி

*(தரம் 6,7)*

1 ஆம் இடம் - உ.குகன்யா, 2 ஆம் இடம் - ச.ஐஸ்வரியா, 3 ஆம் இடம் - மா.சயந்தினி.

*(தரம் 8,9)*

1 ஆம் இடம் - உ.சிவகுமாரி, 2 ஆம் இடம் - யா.யசிந்தா, 3 ஆம் இடம் - க.கௌசலா, க.லதா

*(தரம் 10,11)*

1 ஆம் இடம் - சு.விஜிதகலா, 2 ஆம் இடம் - பா.சயந்தன், 3 ஆம் இடம் - ப.சர்மிளா, சு.நிஷாந்தினி

**கோலம் போடுதல் போட்டி**

*(தரம் 6,7)*

1 ஆம் இடம் - சு.தனா, 2 ஆம் இடம் - தி.மயூரிகா, 3 ஆம் இடம்- த.திவாகரன்

*(தரம் 8,9)*

1 ஆம் இடம் - ந.சுகபாணி, 2 ஆம் இடம் - சா.பிரியதர்ஷினி, 3 ஆம் இடம் - கு.ரஸ்மி.

*(தரம் 10,11)*

1 ஆம் இடம் - கோ.நிவாசினி, 2 ஆம் இடம் - சு.கௌரிசங்கர், 3 ஆம் இடம் - த.சூரியகலா.

**தோரணம் பின்னுதல் போட்டி**

*(தரம் 6,7)*

1 ஆம் இடம் - க.கோபி, 2 ஆம் இடம் - இ.கௌரிசங்கர், 3 ஆம் இடம் - க.கிஷாக்குமார்.

*(தரம் 8,9)*

1 ஆம் இடம் - .சி.நகுலதாஸ், 2 ஆம் இடம் - க.குகதீபன், 3 ஆம் இடம் - சு.பிருந்தாபன், உ.சிவகுமாரி.

*(தரம் 10,11)*

1 ஆம் இடம் - க.மயூரன், 2 ஆம் இடம் - இ.செந்தூரன், 3 ஆம் இடம் - கு.சத்தியேந்திரன்.

# ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியர்களை மதித்துப் போற்றுதல்வேண்டும்!

## உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம்

ஒவ்வொரு பெற்றோருக்கும் தமது வாழ்வில் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த செல்வம் பிள்ளைச் செல்வமாகும். ஏனெனில் எமது பரம்பரை இந்தப் புவியில் மிளிர அந்தச் செல்வமே காரணமாகின்றது. அந்த வகையில் முக்கியத்துவம் மிக்க செல்வமான பிள்ளைகளது வளர்ச்சியில் அக்கறைகாட்டி, அரவணைத்து வளர்க்கும் ஆசிரியர்களை ஒவ்வொரு பெற்றோரும் மதித்துப் போற்றுதல் வேண்டும் என இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பெற்றோர்தின விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையை ஒரு கலைக்கோயில் என்றே கூறவேண்டும. தன்னிடம் வந்துசேரும் குழந்தைகளை அறிவுடன் ஒழுக்கமுடையவர்களாக உருவாக்கித் தரும் பெரும்பணியை இது ஆற்றி வருகிறது. ஒவ்வொரு பிள்ளைகளிலும் இருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்களைக் கண்டுபிடித்து அதனை வெளிக்கொண்டுவந்து தட்டிக் கொடுத்து வளர்த்து விடுவதனூடாக அவர்களுக்குப் பெருமை சேர்ப்பது இந்தக் கலைக்கோயிலாகும்.

இது மழலையர் பூங்கா. இங்கே பல்வேறு பல்லாயிரம் நாற்றுக்கள் உள்ளன. இங்கே பேணி வளர்க்கப்படும் நாற்றுக்களே நாளை நிபுணத்துவம் மிக்கவர்களாக சமூகத்தில் விளங்கப்போகின்றனர்.

பெற்றோர்களையும் பாடசாலையையும் இணைக்கும் ஒரு நிகழ்வு பெற்றோர்தின விழாவாகும். பெற்றோர்களது சொத்தே பாடசாலையாகும். எனவே, பெற்றோர்கள் பாடசாலையினது வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்களது பிள்ளைகளின் கல்வி சிறப்புற அமையமுடியும்.

பாடசாலை என்பது பெற்றோர்களதும், மாணவர்களதும் சொத்தாகும். இங்கு பணிபுரியும் ஆசரியர்களே எமக்கு வழிகாட்டிகள். எனவேதான் பெற்றோர்கள் பாடசாலையினது வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஆசிரியர்கள் தமது மாணவர்கள்மீது ஒருபோதும் கோபிக்கக் கூடாது. எதிரியின்மீது ஏற்படும் உணர்ச்சியே கோபமாகும். மாணவர்கள்மீது வரக்கூடிய உணர்வு அன்பு மட்டுமேயாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (31)

## சைவபரிபாலனசபை பரீட்சை 6 ஆம் திகதி ஆரம்பம்

(ஆழியவளை)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் சைவசமயப் பாடப் பரீட்சை - எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை மாவட்டத்தின் சகல பாடசாலைகளிலும், ஏனைய வெளி மாவட்டங்களிலும் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை வினாத்தாள்கள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும், மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். தரம் 02 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (122)

# பொன்னாலையில் கடற்படையினர் பயிற்சி

பொன்னாலை - திருவடிநிலை கடற்கரையோரமாக நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் பாரிய குண்டுச்சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும் திடீரெனக் கேட்டன.

போர் ஓய்ந்து அமைதி நிலவும் இந்தக காலத்தில் திடீரெனக் கேட்ட குண்டுச்சத்தங்களால் அந்தப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்து காணப்பட்டனர். அரைமணி நேரத்துக்கும் மேலாகக் கேட்ட இந்தக் குண்டுச் சத்தங்களால் வீட்டு யன்னல்கள், கதவுகள் என்பன அதிர்ந்தன.

சிறிது நேரத்தின் பின்னரே அது கடற்படையினரின் பயிற்சி நடவடிக்கை எனத்தெரியவந்தது. (207)

# பொன்னாலை கம்மானை வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

பொன்னாலை - மூளாயிலுள்ள கம்மானை வீதி, சுழிபுரம் பிரதேச சபையால் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது.

பாரிய குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்தவீதி, தற்போது வெள்ளம் நிரம்பி வெள்ளக் காடாக்க காட்சியளிக்கிறது. இதனால் ஊர் மக்களின் வேண்டுகோளுக்கு அமைய இந்தவீதி துரிதகதியில் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது.

கிரவல் மண்ணும், கல்லும் கலந்த மண்ணால் இந்த வீதி நிரப்பப்பட்டு, புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது. இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் இன்னும் ஒரு சில நாட்களில் நிறைவு பெற்றுவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (207)

# தலைவரின் மனிதாபிமானத்தின் வெளிப்பாடாக காந்தரூபன் அறிவுச்சோலை மிளிர்கின்றது!

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் மனிதாபிமானத்தின் வெளிப்பாடாகவும், சிந்தனையாகவும் இன்று காந்தரூபன் அறிவுச்சோலை மிளிர்ந்து கொண்டிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காந்தரூபன் அறிவுச்சோலையின் 11 ஆவது ஆண்டுவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

எங்களுடைய தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றிலே சிங்களப் பேரினவாத்தினால் திட்டமிட்டு தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளபபட்ட இன அழிப்பின் விளைவாக பல ஆயிரக்கணக்கான சிறார்கள் தமது தாய், தந்தையர்களை சொந்த பந்தங்களை இழந்து ஊர் தேசங்களை இழந்து அநாதரவாகத் திரிந்துகொண்டிருந்த காலம் இருந்தது.

இவ்வாறான யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களில் பலர், போரின் கொடூரத்தால் பெற்றோர்களை இழந்து, உறவுகளை இழந்து நின்ற சிறார்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, தன்னை வளர்த்தெடுத்த தமிழீழத் தேசியத் தலைவரிடம் காந்தரூபன் என்ற போராளி கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, இந்த காந்தரூபன் அறிவுச்சோலை இன்று மலர்ந்து நிற்கின்றது.

அந்தப் போராளி விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்டு கரும்புலியாகத் தன்னை மாற்றி அதற்கான பயிற்சியையும் பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே அவனுடைய எதிர்காலம் எது என்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவனது சிந்தனைத் தெளிவின் விளைவாக இன்று காந்தரூபன் அறிவுச்சோலை உயர்வான நிலையை எட்டியிருக்கிறது.

போராளி காந்தரூபன் எதிரிக்கு மனித வெடிகுண்டாகவும், தமிழ் மக்களின் மீது மனிதாபிமான உச்சத்தை நாங்கள் புரிந்துகொள்ளமுடிகின்றது. போராளி தான்பட்ட சுமைகளை தனக்குபின் வருகின்ற சமூகம் அனுபவிக்கக்கூடாது என்பதற்காகத் தமிழீழத் தேசியத் தலைவரிடம் கேட்டுக்கொண்டதுபோல் இந்த இல்லம் உருவாக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற போரின் விளைவாக இந்த அறிவுச்சோலையானது பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற ஒரு நிலை உருவாகியது. அந்த நிலை விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் மிகவும் நெருக்கடி நிறைந்த காலமாகவே இருந்தது. தேசியத் தலைவரின் தெளிவான சிந்தனையின் விளைவாகவும், அதி உயர்ந்த மனிதாபிமானத்தின் வெளிப்பாடாகவும் இந்த அறிவுச்சோலை மிளிர்கின்றது. இதன்மூலம் வளர்க்கப்பட்டவர்கள். இன்று ஆளுமைமிக்க இளைஞர்களாக வெளியேறியுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு பிரதேசத்தில் காலாவதியான பொருட்கள் அழிப்பு

முல்லைத்தீவு பிரதேசத்தின் உணவகங்களில் சுகாதாரசேவையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான மென்பானங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

முல்லைத்தீவு சுகாதார சேவையாளரால் கைப்பற்றப்பட்ட பெருமளவான பொருட்கள் அழிக்கப்பட்டதுடன்,. அவற்றை விற்பனை செய்வோர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், நுகர்வோரை விழிப்புடன் இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவ்வாறு காலாவதியான பொருட்களை விற்பனை செய்வோரை இனங்கண்டு தமக்கு அறிவிக்குமாறும் முல்லைத்தீவு சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

# கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை

(ஆழியவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவருக்கு வழங்கப்பட்டுவந்த கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தங்களது முழு விபரங்களையும் தமது பாடசாலை அதிபரூடாக பதிவுசெய்யுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க மாவட்ட செயலர்களிடம் சேர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவருக்கு வழங்கப்பட்டுவந்த கொடுப்பனவுகள் இடைநிறுத்தியுள்ளமை தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(122)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதியை செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியிலிருந்து, கோவிந்தன் கடைச் சந்தியூடாக வட்டக்கச்சி இராமநாதபுரம் செல்லும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்தவீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில், இந்த வருட முற்பகுதியில் கிரவல் மண் போடப்பட்டு, செப்பனிடப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு வசதியாகக் காணப்பட்டது.

தற்போது பெய்துவரும் மழையால் இந்தப் பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்தப்பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து, இந்த வீதியைத் தார் ஊற்றிச் செப்பனிட்டுத்தருமாறு இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(09)

# வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்கு பழைய மாணவர்களால் கணினி அன்பளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்துக்கு கணினி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் சி.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த அன்பளிப்பை பாடசாலையின் பழைய மாணவர் சி.விஸ்ணுபாலனால் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், அன்பளிப்புச் செய்த மாணவனின் தந்தை சிவகுரு, கண்டாவளை மகா வித்தியாலய அதிபர் சிறிதரன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பாடசாலைக்கு மேலும் பல கணினிகள் பழைய மாணவர்களால் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நுழைவாயில் அடிக்கல் நாட்டுவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அமரர் வீரபத்திர பிள்ளை ஞாபகார்த்தமாக, அவரின் குடும்பத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதியில், பாடசாலை நுழைவாயில் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அடிக்கலைப் பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், பிரதி அதிபர், அமரர் வீரபத்திர பிள்ளையின் மகள் ஆகியோர் நாட்டி வைத்தனர். இந்த நுழைவாயில் கதவை தி.சேரன் குடும்பத்தினர் வழங்க முன்வந்துள்ளனர். (09)

# மின்சார சபையால் தறிக்கப்பட்ட மரங்கள் உரிய முறையில் அகற்றப்படாதுள்ளது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்தில் மின்சார சபையால் வெட்டப்பட்ட மரங்கள் உரியமுறையில் அகற்றப்படாதுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மின்விநியோகத்துக்கென வீதியோரம் நின்ற பயன்தரு மரங்கள் மற்றும் பற்றைகள் என்பன மின்சாரசபையால் தறித்து வீதியில் போடப்பட்டுள்ளன.

இதனால் இந்தப்பகுதி மக்கள் பிரதான வீதியில் இருந்து சிறு வீதிகளுக்குப் பிரயாணம் செய்ய முடியாதநிலை காணப்படுவதுடன், பிரதான வீதியில் வசிப்போர் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுவருகின்றனர்.

மேலும் இதனை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிளிநொச்சி இரத்தினபுர பாலத்துக்கான புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

தற்போது பெய்துவரும் பருவ மழை காரணமாக டிப்போச். சந்தி இரத்தினபுரம் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்தப் பாலத்தை திருத்துவதற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கிரவல் பாதையூடாகச் சைக்கிள், மோட்டார் சைக்கிள், லொறி தவிர்ந்த ஏனைய கனரக வாகனங்கள், இந்த வீதியினூடாகச் செல்வதால் புனரமைப்புப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஏ-9 வீதிக்கு செல்வதற்கு பொருத்தமான வேறு பாதையூடாக செல்லுமாறும் பால ஒப்பந்த நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

# மாயவனூர் பிரபா முன்பள்ளியில் ஆசிரியர், மாணவர்கள் கௌரவிப்பு

வட்டக்கச்சி - மாயவனூர்ப் பிரதேச பிரபா முன்பள்ளி ஆசிரியர், மாணவர்கள் - பெற்றோரால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வு பெற்றோர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை கிளிநொச்சி கிழக்கு திட்ட இணைப்பாளர் கிருஸ்ணா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார். மாவீரர் பிரபாவின் திருவுருவப்படத்துக்கு கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனச் செயலாளர் குமாரசாமி ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் ஆசிரியர்கள், மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(09)



## வன்னிப் பதிவுகள்

### மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மாவீரர் நாள் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு அரசியற்துறைச் செயலகத்தில் மாலை 3 மணிக்கு புதுக்குடியிருப்பு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் வி.கனகசுந்தரசுவாமி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.





கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட கராத்தே பட்டி வீரர்களையும், இறுதிப்போட்டி நிகழ்வதையும் படத்தில் காணலாம்.

(படங்கள் - சு.பாஸ்கரன்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யில் தமக்குஇன்னா*
*பிற்பகல் தாமே வரும்.*
*திருக்குறள்*

# நமது நோக்கு

## புதுடெல்கி மாநாட்டு புலம்பல்கள்

"இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா மீண்டும் தலையீடு செய்யவேண்டுமெனவும், அப்படித்தலையீடு செய்வதன் மூலமே இந்தப் பிரச்சினையில் தற்போது முக்கிய பங்கினை வகிக்கும் விடுதலைப் புலிகளையும் அவர்களின் தலைவரையும் தனிமைப்படுத்த முடியும்" - இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் வேறு யாருமல்ல, இலங்கையில் கதிர்காமர் போன்று இந்தியாவில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியசுவாமியேதான்.

இந்திய அரசியலில் அடிக்கடி புஸ்வாணப் பரபரப்பைக் காட்டி வரும் சுப்பிரமணியசுவாமியின் அரசியல் கோமாளித் தனங்கள் இந்தியப் பிரசித்தமானதாகும். ஒரு தடவை தமிழகத்தில் ஜெயலலிதா அம்மையாரை கண்டபடி விமர்சித்தமைக்காக தமிழகத்திற்குள் விஜயம் மேற்கொள்ள வருகைதந்தபோது திருச்சி விமான நிலையத்தில் வைத்து அவரை விளக்குமாற்றால் அடித்து பெண்கள் ஓட ஓட விரப்பட்ட கதையேபோதும் அன்னாருக்கு தமிழ்நாட்டில் எத்தகை மதிப்பு உள்ளதென்பதை எடுத்துக் காட்டுவதற்கு.

இலங்கை விவகாரம் தொடர்பாக அதிலும் விடுதலைப் புலிகள் தொடர்பாக அவரின் கருத்து நிலைப்பாடும், கொள்கை வெளிப்பாடும் எத்தகைய வெருளித்தனமானவை என்பதை அவரைத் தொடர்ந்து கவனித்து வருகின்றவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டேயுள்ளனர். எனவே, அவரின் இலங்கைப் பிரச்சினை தொடர்பான அறிக்கைகளை எவரும் கருத்தில் எடுப்பதோ கனதியானதொன்றாகக் கருதுவதோ கிடையாது. இருந்தாலும், மக்கள் தன்னை ஒரு அலட்டல் பேர்வழியாக மதிப்பீடு செய்துவைத்திருப்பதை உணர்ந்துகொள்ளும் அளவுக்கு அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் திறன் அவரிடம் இல்லாததால் அவர் தொடர்ந்தும் அர்த்தமற்றதும், அலட்டல்தனம் கொண்டதுமான அறிக்கைகளை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக விட்டுக்கொண்டே வருகிறார்.

இந்திய மற்றும் தமிழக அரசியலில் இவரது பித்தலாட்டங்களும் அச்சுறுத்தல் அல்லது மிரட்டல் பாணியிலான நடவடிக்கைகள் ஒரு காலத்தில் பரபரப்பானதாக இருந்தபோதிலும், காலப்போக்கில் அவையனைத்தும் வெறும் பேய்க்காட்டல் உத்தியைக்கொண்டவை என மக்களால் உணரப்பட்டதை அடுத்து இந்திய அரசியலில் ஒரு குத்துக்கரணப் பேர்வழியாக அடையாளப்படுத்தப்பட்டார்.

இன்று அரசியலில் ஒரு அநாமதேயமாக முகவரி இழந்து நிற்கும் சுப்பிரமணிய சுவாமிக்கு - இந்திய அரசியல் தொடர்பாக அர்த்தமுள்ளதாக எதனையும் பேச எதுவுமேயில்லை. இவர் பேசுவதைக் கேட்கவோ , கைதட்டவோ கூட யாரும் முன்வருவதுமில்லை. அப்படி எவரும் முன்வந்தாலும் தமிழகத்தில் இவரை தமிழ்த்திரைப்பட மூன்றாந்தரக் கோமாளி நடிகர்களைப் போலவே பார்க்கத்தொடங்கிவிட்ட காரணத்தால் திரைப்பட அரங்கோடு அற்றுப்போகும் நகைச்சுவை போன்று அரசியல் மேடையுடன் மறந்துபோகும் கோமாளித்தனமாகவே அவரது செயற்பாடுகளை மக்கள் கவனத்தில் கொள்வது கிடையாது என்பதே உண்மையாகும்.

இப்போதைய அவரது அரசியல் பேச்சுக்கு இலங்கைப் பிரச்சினையும், விடுதலைப் புலிகளும் மட்டுமே பிரதான கருவாகும்.

தேசியத் தலைவர் பிரபாகரனை குற்றம்சாட்டிக் குறைகூறி அவரைக் கைதுசெய்யுமாறு அலறிக்கொண்டிருக்கும் பணியிலேயே அவரது பொழுது போய்க்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், தனது அரசியல் இருப்பை வெளிப்படுத்தும் நோக்கில் அண்மையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதானப்பேச்சுக்களில் இந்தியாவின் பங்கு குறித்து ஆராய புதுடெல்கியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் சந்திரகாசன், டக்ளஸ் தேவானந்தா போன்ற விடுதலைப் புலிகளின் எதிர்ப்பாளர்களும் எம்.கே. அக்பர், இந்து - ராம், டி.ஆர்.கார்த்திகேயன் போன்ற இந்தியாவில் உள்ள புலிகளுக்கு எதிரான நபர்களுமே கலந்துகொண்டார்கள் என்பதை வைத்தே அதன் உள்நோக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியும்.

இவர்களிடையே சுப்பிரமணிய சுவாமியும் புகுந்துகொண்டதில் வியப்பில்லை.

இந்தியா விடுதலைப் புலிகளை ஓரம்கட்டவே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் தலையீடு செய்யவேண்டுமாம்.

புலிகளை ஓரங்கட்டினால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற கருத்தியல் மாயையை இவர்கள் உருவாக்க விரும்புகிறார்கள் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை யில் தமிழர் தரப்பில் யார் பங்கு கொள்ளவேண்டும் - யார் அதற்கு தகுதியானவர்கள் என்பதை ஈழத்தமிழர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். அவர்கள் அதை எப்போதோ தீர்மானித்தும்விட்டார்கள். இதனை இந்திய அரசு உணர்ந்து கொள்ளவேண்டும், உணர்ந்திருக்கவேண்டும் எனவும் நம்புகிறோம்.

இந்த நிலையில் சொந்தநாட்டு மக்களாலேயே புறக்கணித்தவர்களான சுப்பிரமணியசுவாமி போன்றவர்கள் தங்கள் கோமாளித்தன புலம்பல்களை நிறுத்துவதே நல்லது.

## நாடும் நடப்பும்




# குழாய்களை பாதுகாப்பதற்கு உத்தரவாதம் வழங்கினால் மட்டுமே குடிநீர் விநியோகம்!

### அரியாலை நீர்விநியோகம் குறித்து மாநகர ஆணையாளர்

(அரியாலை)

குழாய்களுக்கு சேதம் ஏற்படாது பாதுகாக்கப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டால் மாத்திரமே அரியாலைப் பகுதியில் சேதமடைந்திருக்கும் குழாய்கள் திருத்தப்பட்டு குடிநீர் வழங்கப்படும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி அரியாலைப் பகுதயில் சில பகுதிகளில் குடிநீர்குழாய் சேதமடைந்துள்ளது என்று வெளியான செய்தி குறித்து மாநகர ஆணையாளர் உண்மை நிலையை விளக்கி அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் அவா இவ்வாறு தெரிவித்தார்.

அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அரியாலைப் பிரதேசத்துக்கு யாழ்.கச்சேரி நல்லூர் வீதி குடிநீர்த்தாங்கி மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. முதலில் மலர் மகள் வீதியின் மேற்குப் பக்கத்தில் இருந்த நீர்க்குழாய், மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிழக்குப் பக்கத்திற்கு மாற்றப்பட்டது. மாற்றி இரண்டு நாட்களுக்குப் பின் அதனை சில விசமிகள் உடைத்துள்ளனர். பின்னர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய நீர்க்குழாய் பொருத்தப்பட்டு நீர்விநியோகிக்கப்பட்டது. அதனையும் விசமிகள் உடைத்துவிட்டனர். பின்னால் அந்தக் குழாயை பூட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச மக்கள் இந்தக்குடிநீர்க் குழாயை மீண்டும் திருத்திக்கொடுத்தால் சேதமின்றிப் பாதுகாப்பார்கள் என்ற உத்தரவாதம் தந்தாற்தவிர அதனை மீண்டும் அமைத்துக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறு மாநகரசபையிடம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஸ், பால்மாக்களின் விலைகள் இவ்வாரம் மீண்டும் அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

ஷெல், லாப்ஸ்காஸ் விலைகள் மற்றும் பால்மாக்களின் விலைகள் மீண்டும் இந்தவாரம் அதிகரிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது. இந்தப் பொருட்களின் விலைகளை அதிகரிக்குமாறு கடந்தமாதம் முதல் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விடுத்த வேண்டுகோள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையால் நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த நிலையில் ஷெல் மற்றும் லாப்ஸ்காஸ் விலைகளை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது.

இதனையடுத்து இன்று புதன்கிழமை காஸ் மற்றும் பால்மா விலைகள் அதிகரிக்கப்படுவது குறித்து, நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை கூடி ஆராயவுள்ளது.

கடந்த மாதம் இவற்றுக்கான விலைகள் அதிகரிக்கப்படாமையால், இந்தமுறை விலை அதிகரிப்புக்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அனுமதியளிக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## வடமராட்சி பகுதி வீடுகளில் விஷமிகளால் மிதிவெடிகள் புதைப்பு

### தகராறுகளே காரணமாம்

(வடமராட்சி)

வடமராட்சி துன்னாலை பகுதிகளிலுள்ள வீடுகளில் விஷமிகளால் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுவரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் துன்னாலை வேம்படிப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மிதிவெடியொன்று கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டது.

இதேவேளை - இந்தப் பகுதியில் கடந்த வருடம் மிதிவெடி வெடித்த ஐந்து சம்பவங்கள் இடம்பெற்றன. இனந்தெரியாதோரால் புதைக்கப்பட்ட மிதிவெடிகளால் க.அரசன் (வயது 50) உயிரிழந்தவராவர். மற்றுமொருவர் வை.வசந்தன் என்பவர் தனது இடதுகாலை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் குடும்பத்தகராறு கோஷ்டி மோதல் ஆகியவற்றிலிருந்து வரும் தாக்கத்துக்கு இப்போது மிதிவெடிகளைப் பாவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# ஈழத்துத் தமிழர்களுக்கென தனித்துவமான பண்பாடு உண்டு

### கலாசார நிகழ்வில் தெணியான்

(நெல்லியடி)

தமிழர்களுக்கென தனித்துவமான கலை, கலாசாரம், பண்பாடுகள் இருப்பினும், ஈழத்துத் தமிழர்களுக்கென தனித்துவமான கலைகள் இல்லாமல் இல்லை என கேசரி மன்னவன் கந்தப்பு அரங்கிற்கு தலைமை தாக்கிய க.நடேசு தெணியான் தெரிவித்தார்.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினர் நடத்திய கலாசார விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கேசரி மன்னவன் கந்தப்பு அரங்கிற்கு தலைமை தாங்கிய க.நடேசுதெணியான், கரவெட்டிப் பிரதேச மறைந்த கலைஞர்களது உருவப்படங்கள், ஆக்கங்கள், வாழ்க்கைக்குறிப்புகள் தற்கால கலைஞர்களது ஆக்கங்கள் அடங்கிய கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி சிவப்பிரகாசத்தால் மன்னவன் எனப் பெயர் சூட்டப்பட்ட மன்னவன் கந்தப்பு - பலராலும் மதிக்கப்பட்டவர். பண்டிதமணியின் அபிமான புருஷன் கருத்தோட்டமும், இலக்கியநயமிக்க கவிபாடும் கலைஞரான கேசரி மன்னவன் கந்தப்பு ஒரு சாமகவி சிறந்த நகைச்சுவை சிலேடை கலந்த பாணியில் கதையாலும், கவியாலும் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தவர். அவர் பெயர் தாங்கிய அரங்கிற்கு தலைமை தாங்கும் வாய்ப்புக்கிட்டியமைக்காகப் பெருமையடைகின்றேன்.

கலாசாரம் என்பது ஓர் இனத்தின் தனித்துவமிக்க நடைமுறை வாழ்வின் பிரதிபலிப்பு. அதனை அடியொற்றி வருவதே கலைகள். தமிழர்களுக்கென தனித்துவமான கலை, கலாசாரம், பண்பாடுகள் இருப்பினும், ஈழத்து தமிழர்களுக்கென தனித்துவமான கலைகள் இல்லாமலில்லை. அதன் அடிவேர்களை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம்.

கலைகள் உழைக்கும் வர்க்கத்தில் இருந்தே தோன்றுகின்றன. அவை சமூகம் சார்ந்தவையாகவும் காணப்படுகின்றன. இந்தச் சமூகம் அந்தக் கலையால் மதிக்கப்படாமை காரணமாக, அவை அருகிக்கொண்டே போகின்றன.

உதாரணமாக - பறை அடித்தலைக் குறிப்பிடலாம். "பாண்ட்" வாத்தியம் இசைக்கும்போது, அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். ஆனால், பறை அடிப்பவர்கள் மதிக்கப்படுவதில்லை. ஆனால் பாண்ட் அடிப்பவர்கள் பறை அடிப்பவர்களாகக் கூட இருக்கலாம். இது யதார்த்தமான உண்மை என அவர் மேலும் தெரிவித்தார்.

(13)

வாரநோக்கு..

- யாழவன்

# சந்திரிகாவைக் கடித்த விஷ ஜந்து அவர் மடியிலிருந்த விமல் வீரவன்சவே





ஜனாதிபதி தொடர்பாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ள கருத்துக்களின் காரணமாக தற்போது அரசியல் அரங்கிலே சர்ச்சை யொன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏதோ தாம் இல்லாவிட்டால் சந்திரிகாவால் ஜனாதிபதியாக நீடித்திருக்க முடியாது எனும் பாணியிலே விமல் வீரவன்ச கருத்துக்களை வெளியிட்டுள்ளார். தமது துணை இருப்பதனால் தான் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கே உயிர் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்து வெளிப்படுத்துகையானது, சுதந்திரக் கட்சி அரசியல் வட்டாரங்களிலே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் ஜே.வி.பியினர் தொடர்பாக ஏற்கனவே வெறுப்புக் கொண்டிருந்த தலைவர்களுக்கு இந்தக் கருத்து புண்ணில் வேல் பாச்சுவது போலவும் அமைந்துள்ளது.

உண்மை எதுவெனில், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இதுவும் வேண்டும். இன்னும் வேண்டும், ஆரம்பத்திலிருந்தே இசகு பிசகுகளுடன் ஓடிக் கொண்டிருந்த ஜே.வி.பி, சுதந்திரக் கட்சிக் கூட்டு வண்டில் மாடு, தற்போது ஒவ்வொரு மாடும் ஒவ்வொரு திசையில் இழுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தனது கணவரைக் கொலை செய்த கொலையாளிகள் எனத் தெரிந்திருந்தும், வேண்டா வெறுப்பாக அரசியலில் ஆட்சி பீடத்தையும் அதிகார வலுவையும் தக்க வைப்பதற்காக ஜே.வி.பி யினருடன் கூட்டினை ஏற்படுத்திக் கொண்டார் சந்திரிகா. ஜே.வி.பி எனும் விஷ ஜந்துக்களை மடியிலே கட்டிக் கொண்டு ஒருவாறாக இவ்வளவு காலமும் ஆட்சியை நகர்த்தி வந்தார். இப்போது அந்த விஷ ஜந்துக்களிலே பொல்லாத ஜந்து சந்திரிகாவின் முக்கிய இடத்திலேயே கடித்து விட்டது. அது தான், அவர் இதுவரை காலமும் எதிர்க்கட்சிகளை மிரட்டுவதற்குப் பயன்படுத்தி வந்த நிறைவேற்று அதிகாரம்.

நிறைவேற்று அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு, என்ன செய்வதென்றே தெரியாமல் ஜனாதிபதி முழித்துக் கொண்டிருந்தார். அவரது கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் கோடிட்டு இருந்தன. பகலில் பதவியில் தூங்கி விட்டு இரவில் தூக்கமின்றித் தவித்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே "எம்மோடு கூட்டை ஏற்படுத்திக் கொண்டு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார், மக்கள் இயக்கமாக எமது அமைப்பு கிராமங்கள் தோறும் சென்று வாக்குகளை சுவீகரித்துக் கொண்டது. இதனாலேயே சந்திரிகா அரசியலிலே தப்பிப் பிழைத்தார்." என்றெலலாம் விமல் வீரவன்ச முழக்கமிட்டுள்ளார்.

விமல் வீரவன்சவின் உரை காரணமாக நாட்டிலேயொரு ஆரோக்கியமான அரசியல் மாற்றம் ஏற்படலாமெனக் கருதப்படுவதனால் சமாதானத்தின்பால் அக்கறை கொண்ட ஊடகங்கள் இவரது இரத்தினபுரி உரையையும், அதன் பின் அவர் தெரிவித்து வரும் கருத்துக்களையும் மீண்டும் மீண்டும் ஒலி, ஒளிபரப்பு செய்து வருகின்றன. இந்த உரையைக் கேட்டுக் கொதிப்படைந்துள்ள சுதந்திரக் கட்சியினர் தொடர்ந்தும் ஜே.வி.பியோடு கூட்டணியாக இருந்தால் தமது கட்சிக்கே ஆபத்தாகிவிடும் என்பதையுணர்ந்து கூட்டை மறித்துக் கொண்டு வெளியே வரும்படி ஜனாதிபதிக்கு அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றனர்.

இவ்வாறு கூட்டை உடைப்பதாகவிருந்தால் ஆட்சி கவிழும், அல்லது கலைக்கப்படவேண்டும். இல்லாது போனால் ஏனைய கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசை அமைக்க வேண்டி ஏற்படும். இவற்றுள் ஏதாவது ஒன்று நிகழ்ந்தாலும் அது நிச்சயமாக சமாதானப் பாதையிலே சிறு முன்னேற்றத்தையாவது ஏற்படுத்தும். இதனைக் கருத்திற் கொண்டே சமாதான சார்பு ஊடகங்கள் வீரவன்சவின் உரையை ஊதிப் பெரிதாக்கும் முயற்சியிலே ஈடுபட்டுள்ளன. வீரவன்சவும் 'அறநனைந்தவனுக்குக் கூதல் என்ன குளிர் என்ன' எனும் மாதிரி மேலும் மேலும் மோசமான கருத்துக்களையே வெளியிட்டு வருகிறார்.

## துகிலுரித்த துச்சாதனர்களுடன் புதிய கூட்டு

போகிற போக்கைப் பார்த்தால் இன்று சுதந்திரக் கட்சியென ஒன்று இலங்கையிலே பேசப்படுகின்றதாகவிருந்தால் அதற்குக் காரணமே எமது அமைப்புத்தான் எனவும் வீரவன்ச கூறலாம். எம்மோடு இணைந்து தேர்தலில் போட்டியிட்டமையினாலேயே சுதந்திரக் கட்சியால் ஆசனங்களைக் கைப்பற்ற முடிந்தது. இல்லாவிடில் முக்காடு போட்டுக் கொண்டு மூலையிலே உட்கார வேண்டி வந்திருக்கும் என்றெல்லாம் வீரவன்ச கூறுவதற்கான வாய்ப்புக்களுமுண்டு. இதனால் வலுவடையும் ஜே.வி.பி, சுதந்திரக் கட்சி முறுகல்நிலை கூட்டமைப்பு உடைவதற்கு வழிகோலி மீண்டுமொரு தேர்தலுக்குக் களம் அமைக்கலாம்.

எது எவ்வாறிருப்பினும் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மௌனம் காத்து வருகின்றமையானது வியப்பாகவேயுள்ளது. பலரும் வீரவன்சவின் உரையைக் கண்டிக்கும் போது, அதனுடன் சம்பந்தப்பட்ட சந்திரிகா மட்டும் எதுவுமே பேசாது மௌனமே பதிலாகவுள்ளார். ஜே.வி.பியினர் தன்னை அவமானப்படுத்துவதைப் பொறுக்கமாட்டாதே முன்னர் ஆளும் கூட்டமைப்புத் தலைமைப் பதவியை ஜனாதிபதி இராஜினாமாச் செய்தார். அதன் மூலமாக ஜே.வி.பியின் தொல்லையில் இருந்து தப்ப முடியுமென எண்ணியவருக்குத் தற்போதைய விடயம் தலையிடியாக வந்து அமைந்துள்ளது.

இதுவரை காலமும் அமைச்சரவைக் கூட்டங்களிலும், ஆளும் கட்சிக் கலந்துரையாடல்களிலுமே ஒலித்து வந்த ஜே.வி.பியின் கிண்டல்கள், தற்போது மக்கள் பங்கு பெறும் அரங்குகள் மூலமாகவும் வெளிவரத் தொடங்கி விட்டன. இதனால் பறக்கப் போவது என்னவோ சந்திரிகாவினதும் அவரது கட்சி மற்றும் சகாக்களினதும் மானமேயாகும். ஜே.வி.பியின் கிண்டல்களைக் கேட்டு கேட்டு புளித்துப் போன சந்திரிகாவுக்குத் தற்போதைய கருத்து சிறிய விடயமாகக் கூட இருக்கலாம். இதனாலேயே அவர் இதனைக் காதில் போட்டுக் கொள்ளாமலுள்ளார் எனக் கருத முடியும்.

ஆனால் ஜே.வி.பியின் செயற்பாடுகளின் காரணமாக ஏற்கனவே கடுப்படைந்திருந்த சந்திரிகா, நிச்சயமாக இந்த விடயம் தொடர்பாகவும் கொதிப்படைந்தே இருப்பார். ஆனால் அவரால் எதுவுமே செய்ய முடியாத நிலையேயுள்ளது. வெறுமனே கண்டனத்தையும், கவலையையுமே அவரால் வெளியிட முடியும். மீறி நிறைவேற்று அதிகாரத்தை உபயோகித்து ஜே.வி.பி வசமுள்ள அமைச்சுக்களில் ஒன்றிரண்டைப் பறிப்பதோ அல்லது ஜே.வி.பியுடனான கூட்டை முறிப்பதோ அவரால் இயலாத காரியமே. இந்த நிலையில் வைத்துப் பார்த்தால் பிரசார செயலர் கூறுவது உண்மையாகக் கூட இருக்கலாம்.

அதாவது, சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்துக்குத் தாமே உயிர் கொடுத்துள்ளார்கள் என்பதனால், அதே நிறைவேற்று அதிகாரத்தை எவ்வாறு ஜே.வி.பிக்கு எதிராகவே பயன்படுத்துவது? இப்போது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் வலுவின்றியே அடங்கிக் கிடக்கிறது. இந்தக் கருத்தைப் பொய்யாக்க வேண்டுமாக இருந்தால், வீரவன்ச கூறுவது போல ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கு ஜே.வி.பி உயிர் கொடுக்கவில்லை, அது என்றுமே உயிரோடு தான் இருக்கிறது எனவும் நிரூபிக்க வேண்டுமாகவும் இருந்தால் உடனடியாக வீரவன்ச மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் இதுவரை எடுக்கப்படவில்லை. எனவே வீரவன்ஸ கூறுவது தப்பானதாகவே இருக்கிறது என கொள்ள முடியாத நிலையேயுள்ளது.

இது இவ்வாறிருக்க வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை புனர்வாழ்வு புனரமைப்புக்கென மூன்று புதிய அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். முஸ்லீம் காங்கிரசைச் சேர்ந்த இந்த அமைச்சர்களின் நியமனமானது, முஸ்லீம் காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள மற்றுமொரு பிளவை சட்டரீதியாகத் தெளிவுபடுத்தி நிற்கின்றது. கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்க, அவருக்குக் கீழே இயங்கும் சகாக்கள் ஆளும் கட்சியிலே அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர். மரத்தின் ஒவ்வொரு கிளைகளாக வெட்டப்பட்டு இறுதியிலே மரமே வேரோடு பிடுங்கப்படுவது போல முஸ்லீம் காங்கிரஸ் கட்சியும் அழிந்து போய்விடலாம். இது முஸ்லீம் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தடையாகவே அமையும்.

தமிழர்களிடமிருந்து முஸ்லீம் அரசியற் தலைவர்கள் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும். அதாவது, இற்றைக்குப் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் தமிழர்கள் தமது ஏகப் பிரதிநிதிகள் என்று யாரையுமே கூறமுடியாதளவுக்குத் தமிழ் இயக்கங்களின் எண்ணிக்கையும், தமிழ் அரசியற் கட்சிகளின் பரவுகையும் காணப்பட்டது. இதனால் விடுதலையை வென்றெடுப்பது என்பது குதிரைக்கொம்பாகவே இருந்தது. காலப்போக்கிலே இந்த நிலையால் விளையும் ஆபத்தை விளங்கிக்கொண்ட தமிழ் மக்கள் கொடுத்த நெருக்குதல்களின் காரணமாகவே முக்கியமான தமிழ்க் கட்சிகள் இணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்றதுடன், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டனர். இதன் பின்னரே ஈழத்தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினை உலக அரங்கிலே பேசப்படுமளவுக்கு முக்கியத்துவம் பெற்றது. சர்வதேசமும் தமிழ் பிரதிநிதிகளுடைய குரல்களுக்கு செவிசாய்க்கத் தொடங்கியது.

இதனையுணர்ந்தாவது முஸ்லீம் மக்களும் தமது ஏகப் பிரதிநிதிகளாக ஒரு கட்சியையே பிரகடனப்படுத்தி, அந்தக் கட்சியின் கீழே தமது தலைவர்கள் அனைவரையும் ஒன்று திரட்ட வேண்டும். இதன் மூலமே அவர்கள் எண்ணுவதுபோல தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். பதவி, பட்டம் என்பவற்றுக்காக மோசம் போகும் தலைவர்களைப் புறந்தள்ளி, உண்மையானவர்களை இனங்காணவேண்டும். இதுவே வெற்றிக்கு வழியாகும்.

இவை இவ்வாறு ஒருபக்கம் நிகழ்ந்து கொண்டிருக்க ஓடிப்போனவர்களும், துரோகிகளும் இணைந்து புதிய கட்சியொன்றை உருவாக்கியுள்ளார்கள். துரோகி கருணாவும், முன்னாள் ஈ.என்.டி.எல்.எப் இயக்க உறுப்பினர்களும் இணைந்து தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் எனும் புதிய கட்சியைத் தோற்றுவித்துள்ளனர். அது மட்டுமன்றி அந்தக் கட்சியை ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றோடு இணைந்து புலிகளுக்கு எதிரான புதிய சம்மேளனமொன்றையும் உருவாக்கியுள்ளனர். இவற்றுக்கெல்லாம் பின்னணியிலே நின்று செயற்பட்டு வருகின்றவர் ஆனந்தசங்கரி எனப் பேசப்படுகிறது. உண்மையிலே சங்கரி, கருணா தலைமையிலான கட்சிக்குப் போசகராக இருக்கும் அடிப்படைத் தகுதிகளை உடையவர். எனவே பொருத்தமானவர் பொருத்தமான வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை துறந்துவிட்டு கருணாவின் ஆட்சியோடு தன்னை இணைத்து கொள்வதே சங்கரிக்குப் பொருத்தமானதாகும். கருணாவுக்குத் தக்க சகா கிடைத்த மாதிரியுமிருக்கும்.

இந்த நிலையிலே இலங்கையின் சமாதான முயற்சிகளிலே இந்தியாவின் பங்கு எதுவென ஆராய்வதற்கென ஒரு மாநாடு சுப்பிரமணிய சுவாமியின் தலைமையிலே நடைபெறவுள்ளது. அரசியலிலே ஐந்து சதம் கூட பெறுமதியில்லாத சுப்பிரமணிய சுவாமி, தான் இருப்பதை ஞாபகப்படுத்துவதற்காக அவ்வப்போது இவ்வாறான பந்தாக்களைக் காட்டி வருவது வழமை. அது போலவே இம்முறை மாநாடு ஒன்றைக் கூட்டி அதிலே விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகள் அனைவரையும் வரவழைத்து புதிய கருத்தொன்றை கண்டு பிடிக்கப் போகின்றார். இந்தியாவின் சமாதானப் பங்கு தொடர்பாக இந்திய அரசயலிலே தக்க பதவிகள் எதனையுமே கொணடிராத ஒருவர் முடிவு எடுக்கப் போகிறார். இது பூனைக்கு மணி கட்டிய எலிகளின் மாநாடு போலவே முடியப் போகிறது. பாவம் இந்தியாவும் இலங்கையின் சமாதானமும். இலங்கையின் சமாதானம் என்ன பாவந்தான் செய்ததோ தெரியாது. கண்டவர்களின் கைளில் எல்லாம் படாத பாடுபடுகிறது. இதனைப் பார்த்துக் கொண்டு இனியும் பொறுமை காக்க சமாதான அனுசரணையாளர்களோ சமாதான, பங்காளிகளோ பார்வையற்றவர்களாக இருக்க முடியாது. உரிய நேரத்தில் உரிய முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு அவர்கள் இன்று கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அனேகமாக இந்த முடிவுகளின் தன்மை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகவே இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ❄

**நிறைவேற்று அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு, என்ன செய்வதென்றே தெரியாமல் ஜனாதிபதி முழித்துக் கொண்டிருந்தார். அவரது கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் கோடிட்டு இருந்தன. பகலில் பதவியில் தூங்கி விட்டு இரவில் தூக்கமின்றித் தவித்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே "எம்மோடு கூட்டை ஏற்படுத்திக் கொண்டு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டார், மக்கள் இயக்கமாக எமது அமைப்பு கிராமங்கள் தோறும் சென்று வாக்குகளை சுவீகரித்துக் கொண்டது. இதனாலேயே சந்திரிகா அரசியலிலே தப்பிப் பிழைத்தார்." என்றெல்லாம் விமல் வீரவன்ச முழக்கமிட்டுள்ளார்.**

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு பொலிஸார் ஒருவர் படுகாயம்

பாகிஸ்தானிய நகரான கியு எற்றாவில் இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் பாகிஸ் தானியப் பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தக் கார் குண்டுவெடிப்பு பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமாகிய பலோசிஸ்ரனின் தலைநகர் கியுஎற்றாவில் பிரதம அமைச்சர் ஒருவரின் வீட்டிற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

தென்மேற்கு மாகாணமாகிய பலோச்சிஸ்ரனின் அமைச்சர் ஜாம் முகமட்யூசுவின் வீட்டிற்கு மிகஅருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றினுள் இருந்த குண்டே வெடித்ததாகவும் இக்குண்டுத்தாக்குதல் பலோச்சிஸ்ரன் அமைச்சர் முகமட்யூசுவினை இலக்குவைத்தே நடாத்தப்பட்டதாகப் பெலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலிற்குப் பயன்படுத்தப்பட்ட கார் சுக்குநூறாகச் சிதைந்துள்ளதுடன் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் உள்ள வீடுகளின் யன்னற் கண்ணாடிகள் யாவும் நொறுங்கிப்போயுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் இது ஒரு பாரியதாக்குதல் எனவும் ஆனால் அதிஷ்டவசமாக உயிரிழப்புகள் ஏற்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

ஆனால் இத்தாக்குதலின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று உறுதியாகத் தெரிவிக்க முடியாதிருப்பதாக பலோஸ்சிஸ்ரன் மாகாண உள்துறை அமைச்சர் சொகைப் நொசர்வனி தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களாக இந்த நகரம் தீவிர்வாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றது.

கடந்த மார்ச்மாதம் பலோச்சிஸ்ரன் நகரத்தின் சியா முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 40 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை பலோச்சிஸ்ரன் நகரத் துறைமுகம் ஒன்றில் கடந்த மேமாதம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் மூன்று சீனப் பொறியியலாளர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

# நேற்று பரபரப்பான வாக்களிப்பு

## புஷ் - ஹெரி கடும் போட்டி




உலகில் உள்ள அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்று இடம்பெற்றது.

அமெரிக்கர்களஅது வழமைப்படி நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித்தேர்தலின் முதலாவது வாக்களிப்பு இசைக்கருவிகள் முழங்க பன்சியோ மாநிலத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்றுக்காலை முடிவடைந்ததைத் தொடர்ந்து வாக்களிப்பு நடவடிக்கைகள் மிகவும் உற்சாகத்துடன் இடம்பெற்றன.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதித்தேர்தல் இடம்பெறும் வல்லரசு நடாகிய அமெரிக்காவின் கிழக்கு மாநிலத்தில் கடந்த 40 ஆண்டுகளில் இம்முறையே அதிகளவிலானோர் வாக்களித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த பல மில்லியன் மக்கள் தமக்கான ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையில் மிகவும் உற்சாகமாக ஈடுபட்டுள்ளதாகத் தேர்தற் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

நடைபெற்றுள்ள தேர்தல் வாக்களிப்புக்கள் தொடர்பாக குடியரசுக்கட்சிச் சட்டத்தரணிகளும் ஜனநாயகக் கட்சிச் சட்டத்தரணிகளும் சர்வதேச தேர்தற் கண்காணிப்புக் குழுவினரும் இணைந்து அறிக்கை ஒன்றினைத் தயாரித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற வாக்களிப்புத் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள கருத்துக் கணிப்புக்களின்படி குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹெரிக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதாகவும் யார் வெற்றி பெறுவர் எனக் கணிப்பிட்டுக் கூறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோஜ் புஷ் மற்றும் ஹெரிக்கும் இடையே கடும் போட்டி நிலவிவருகின்றபோது ஜோஜ் புஷ்சின் வெற்றி தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக அமெரிக்க மாநிலமான அல்பு கியுயேற்கியாவில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் ஸ்ரீபன் இவன்ஸ் தெரிவித்தார்.







தற்போதைய ஜனாதிபதி ஜோஜ் புஷ் நம்பிக்கையுடன் காணப்பட்டாலும் அவரிடம் பதகளிப்புத் தென்படுவதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் ஜோன் ஹெரி முதலாவது தடவையாக போட்டியிடுவதால் பெருமளவிலான வாக்குகளை ஹெரி பெறுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதென்று வோஷிங்டனில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் றொப் வோட்சன் அமெரிக்கர்களிற்குத் தமது தலைவர்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் பழக்கம் இன்மையால் ஜோர்ஜ் புஷ் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

பெரும்பாலும் இன்று தேர்தல் முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இஸ்லாத்தை நிந்தித்து படம் தயாரித்த

# நெதர்லாந்து படத்தயாரிப்பாளர் சுட்டும், குத்தியும் கொல்லப்பட்டார்



உயிரிழந்த வான்கோ



பொலிஸ் பாதுகாப்பிலுள்ள அயான் ஹேசி அலி

சர்ச்சைக்குரிய வகையில் இஸ்லாத்தை நிந்தித்து படமெடுத்த நெதர்லாந்து திரைப்பட இயக்குனரான தியோ வான்கோ (வயது47) என்பவர் கத்தியால் குத்தியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலைசெய்யப்பட்டார்.

இவ்வாறு படுகொலையில் ஈடுபட்டவரை கொலை நடந்த இடத்திற்கருகில் வைத்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைது செய்தனர்.

வான்கோ தனது படத்தைத்திரையிட்ட பின்னர் இவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இவரது இந்தப்படத்தில் இஸ்லாமிய சமூகம் முஸ்லிம் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளும் வன்செயல்கள் சித்தரிக்கப்பட்டிருந்தன.

இவரது இந்தப்படத்தின் கதைப்படி முஸ்லிம் பெண்ணொருவர் கட்டாயத் திருமணத்திற்கு ஆளாக்கப்படுகின்றார். அதன் பின்னர் அவரது கணவனால் அவர் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்படும் அதேவேளை கணவரின் மாமன் அந்தப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குகின்றார். இதன்பின்னர் மெல்லிய உடையில் தோன்றும் இந்தப் பெண் தனது உடம்பில் குர்ஆன் வசனங்களை எழுதியுள்ளதுடன் சவுக்கடித் தழும்புகளுடனும் காணப்படுகின்றார்.

இவரது இந்தப்படத்தைப் பார்வையிட்ட நெதர்லாந்து முஸ்லிம்கள் கடும் கோபமடைந்தனர் நெதர்லாந்தில் பத்து லட்சம் முஸ்லிம்கள் வாழ்வதாகவும் இது அந்த நாட்டு மொத்த சனத்தொகையில் 5.5 வீதம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வான் கோவை கொலை செய்தவர் முஸ்லிம்களின் தேசிய உடைஅணிந்து சைக்கிளில் வந்ததாக இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப்படம் வெளிவந்தபின்னர் வான். கோவிற்கு கொலை அச்சுறுத்தல் வந்ததாகவும் ஆனால் அவர் அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லையெனவும் அவரது நண்பர்கள் தெரிவித்தனர். அத்துடன் வான்கோ பேச்சு சுதந்திரத்தை கொண்டவரெனவும் முரண்பாடான மனிதரெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வான்கோ தயாரித்த படத்திற்காகவே அவர் கொல்லப்பட்டார் என்றால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாதென நெதர்லாந்து பிரதமர் ஜான்பீற்றர் பால்கினென்டி தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம்களை வெளிப்படையாகவே விமர்சித்து வரும் பெண் அரசியல்வாதியான அயான் ஹேசி அலிக்கும் கொலைஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டள்ளதை யடுத்து அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# எகிப்து ஹோட்டல் குண்டுவெடிப்பு; அல்கொய்டாவிற்கு தொடர்பில்லை!



இஸ்ரேலின் எல்லைப்பகுதியிலுள்ள எகிபதின் நிலப்பரப்பினுள் இருந்த ஹோட்டல் மீது கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதலுக்கும் அல்கெய்டா அமைப்பிற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென எகிப்தின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு முக்கிய காரணம் அல்கொய்டா அமைப்பினரே என இஸ்ரேல் தெரிவித்த குற்றச்சாட்டை மறுக்கும் வகையில் கருத்து தெரிவித்த எகிப்தின் உள்துறை அமைச்சர் கபீப் அல்-அட்லி பலஸ்தீனத்தில் தற்போது இடம்பெற்றுவரும் வன்செயல்கள் மற்றும் பதற்ற நிலைகளின் எதிரொலிப்பே இந்தப் பகுதியில் நடந்த தாக்குதலுக்குக் காரணமெனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவாகள் எனச் சந்தேக்கிக்கப்படும் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலும் படையினர் சேகரித்த தகவல்களிலும் இந்த தாக்குதலுடன் அல்கொய்டாவிற்கு தொடர்பில்லையென்பது தெளிவாகியுள்ளது.

பலஸ்தீனத்தில் பிறந்தவரும் எகிப்தைச் சேர்ந்தவருமான ஒருவரும் மற்றும் எகிப்தின் நாடோடி இனத்தைச் சேர்ந்த ஒருவருமே இந்தத் தாக்குதலைநடத்தியதாகவும் அவர்களும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

ஆனால் இந்தத் தாக்குதலுடன் ஒசாமா பின்லேடனின் அமைப்பொன்று நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டிருப்பதாக இஸ்ரேலின் பிரதிப் பிரதமர் எகுட் ஒல்மேட் எகிப்திய பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை இந்த தாக்குதலுக்குப் பின்னர் சரிந்திருந்த உல்லாசப் பயணத் துறையை மீளவும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக எகிப்து தெரித்துள்ளது.

இதன்படி இஸ்ரேலிலிருந்து எகிப்திற்கு வரும் சகல வாகனங்களுக்கும் வரிகள் விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் இஸ்ரேல் சென்று உல்லாசப் பயணிகளை ஏற்றிவரும் சிறிய இலகு ரக விமானங்களுக்கும் ஊக்குவிப்பு கொடுப்பன வழங்கப்படவுள்ளதாக எகிப்து அறிவித்துள்ளது.

# வெளிநாட்டவர் இருவர் உட்பட நால்வர் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கடத்தல்!

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் வைத்து இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட ஆறுபேரை இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் ஒரு அமெரிக்கர், ஒரு நேபாளியர் மற்றும் நான்கு ஈராக்கியர்கள் அடங்குவதாக ஈராக்கின் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

தலைநகர் பாக்தாத்தின் மன்சூர் மாவட்டத்திலுள்ள சவுதி அரேபிய கட்டட கம்பனி ஒன்றின் அலுவலகத்தில் இவர்கள் தங்கியிருந்த வேளையே கடத்தப்பட்டனர்.

இதேவேளை நேற்று முன்தினம் தலைநகர் பாக்தாத்தில் பிரதி ஆளுநர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குத் தாமே பொறுப்பென இஸ்லாமிய இராணுவமான அன்சார் அல் சுன்னா என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இதனிடையே றமாடி பகுதியில் கிளர்ச்சி வாதிகளுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையே தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும், இந்த இருபகுதி மோதல்களிலும் சிக்கி அறுவர் பலியானதாக பலூஜா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

பலூஜா மீது அமெரிக்கப் படையினர் நடத்த திட்டமிட்டுள்ள தாக்குதலுடன் தான் முற்று முழுதாக உடன்படவில்லையென ஈராக் ஜனாதிபதி காசியாவிர் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்கா தொடர்ந்தும் தனது படைபலத்தை அதிகரித்த வண்ணமுள்ளது. தற்போது அமெரிக்கா புதிதாக அனுபபிய படையினருடன் சேர்த்து ஈராக்கில் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 42 ஆயிரம் என தகவல்கள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புதிய அமைச்சர் நியமனம் உடன்பாட்டை மீறும் செயல்!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் மூவரை ஜனாதிபதி சந்திரிகா புதிதாக நியமித்துள்ளமை தமது கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மறிய ஜனாதிபதியின் தன்னிச்சையான செயல் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை இது பாதிக்கும்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 ஆக மட்டுப்படுத்தவே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

அமைச்சரவை அந்தஸ்தற்ற அல்லது திட்ட அடிப்படையில் அமைச்சர்கள் நியமிப்பதற்கு அளும் கூட்டணியினர் முன்னர் உடன்பட்டிருந்தனர்.

புதிதாக பிரதி அமைச்சர்கள் மூவர் நியமிக்கப்பட்டது தொடர்பாக கூட்டணியில் உள்ள ஜே.வி.பியுடன் கலந்துரையாடப்படவில்லை.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச்செலவை மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கும் இந்தவேளையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடாது.

தொடர்ந்து ஜனாதிபதி எதேச்சாதிகாரத்தின் ஊடாக அமைச்சர்களை நியமிப்பாராயின் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் அந்தக் கடிதத்தில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர்ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

### பேச்சுக்கள்...

பின்னரே உறுதி வழங்கப்பட்ட நிதி உதவிகளைக் கொடுக்க முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை அந்த யோசனைகளில் அவர்கள் எந்தவித மாற்றங்களும் செய்யவில்லை.

ஜனாதிபதி முன்வைத்த சில யோசனைகளை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தேன்.

இந்த யோசனைகளை விடுதலைப் புலிகள் ஆராய்வார்கள் என்று நம்புகிறேன்.

இதேவேளை- சமாதானப் பேச்சுவார்தைகளில் தமிழ்மக்கள் சார்பாக பங்குபற்றும் நியாயமான தரப்பினராக தமிழீழ விடுதலைப் புலிகளை அரசாங்கம் கருதுகின்றது.

அரசாங்கமும விடுதலைப் புலிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்கள் என்றும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நம்பிக்கை தெரிவித்தார்.

### காத்தான்....

எண்ணிக்கை இதுவரை 18 என பொலிஸ் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.காயமடைந்தவர்களில் ஒருவர் பொலிஸ் கொன்ஸ்டபிள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினமிரவு இரும்புத்தைக்கா பள்ளிவாசல் மீதான கிரனைட் தாக்குதலில் காயமடைந்த 15 பேரில் 12 பேர் தொடர்ந்தும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை காத்தான்குடி பிரதேசத்தில் இஸ்லாமிய மதப்பிரிவினரிடையே நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து நேற்றுக் காலை 6.00 மணி முதல் இன்று காலை 6.00 மணிவரை 24 மணிநேர ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இரும்புத்தைக்கா பள்ளிவாசலுக்கு கிரனைட் வீசப்பட்ட சம்பவத்தையடுத்து வன்முறைகள் வெடித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்து அங்கு வன்முறைகள் ஓய்ந்து பூரண அமைதி நிலவுகின்றபோதிலும் மக்கள் மத்தியில் அச்சம் பீதி பதற்றம் தொடர்கிறது.

வீதிகளில் பரவலாகக் காணப்படும் பொலிஸாரும், இராணுவத்தினரும் அப்பிரதேச மக்களின் நடமாட்டத்திற்கு முற்றாக தடை விதித்துள்ளனர். அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞானப் பேரவைக்குரிய பதூரியா பள்ளிவாசலுக்கும் அந்த மதக் கோட்பாட்டை பின்பற்றும் இஸ்லாமியர் வாழும் பகுதிகளுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸார் காத்தான்குடி பிரதேசத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உடமைகளுக்கான சேதங்களும், இழப்புக்களும் குறிப்பிட்ட மதப் பிரிவினருக்கே ஏற்பட்டுள்ளது.

35 இற்கு மேற்பட்ட வீடுகள் 15 இற்கு மேற்பட்ட வியாபார நிலையங்கள், 5 மோட்டார் சைக்கிளகள், 12 சைக்கிள்கள், ஒரு ஓட்டோ என இந்த சேதங்கள் அடங்குகின்றன.

சில வீதிகளில் உடமைகள் வெளியே தூக்கி வீசப்பட்டு அடித்து நொருக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் முகாமை அழித்ததான கடற்படையினரின் செய்திக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு!

திருமலை - கண்டி வீதியில் பாலம்போட்டாறுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமொன்றைத் தாம் தாக்கி அழித்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்த கூற்றில் எவ்வித உண்மையுமில்லையெனத் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்தார்.

கடற்படையினரின் இந்த அறிவிப்புத் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

பால்ம்போட்டாறுப் பகுதியில் எமது முகாமைக் கடற்படையினர் தாக்கியழித்ததாகத் தெரிவித்த செய்தியில் எவ்வித உண்மையுமில்லை. ஏனெனில் இந்தப் பகுதியில் புலிகள் முன்னரேயோ அல்லது தற்போதோ எவ்வித முகாமையும் அமைத்திருக்கவில்லை. இந்தப் பகுதியானது இராணுவத்தினரதும், கடற்படையினரதும் நெருங்கிய பிரதேசங்களாகும்.

திருமலைத் துறைமுகப் பகுதிக்கு அச்சுறுத்தலாக விடுதலைப் புலிகள் முகாம்களை அமைத்துவருவதாக அண்மைக்காலமாக அரசாங்கமும், கடற்படையினரும் தேவையற்ற விதத்தில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வரும் நிலையில், கடற்படையினர் தற்போது இவ்வாறான ஒரு வதந்தியைப் பரப்பி தமது பொய்யான செயதிக்கு ஆதாரம் தேடமுற்பட்டுள்ளனர்.

இவர்களின் இந்த பொய்யான செய்தி தொடர்பாக நாம் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்ட பிரதிநிதிகளைச் சந்தித்து எமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளோம் எனவும் அவர் கூறினார்.

### பாதுகாப்பு....

அமைச்சின் செயலாளர் ரணவிராஜா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆகியோரையும் இவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின்போது இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதனிடையே, இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் விஜ் இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். காலை 7.40 மணியளவில் வன்னிப் படைத்தலைமையகத்துக்கு விஜயம் செய்யும் இவர் காலை 8 மணிமுதல் 9 மணிவரை ஓமந்தைப் பகுதி முன்னரங்க காவலரண் பகுதிக்குச் செல்லவுள்ளார்:

இதன்பின்னர் - மாமடுப் பகுதிக்குச் சென்று அங்கிருந்து நண்பகல் 12 மணியளவில் அநுராதபுரத்துக்கும் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி.....

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் ஆகியோரைச் சந்தித்த பின் ஞாயிற்றுக்கிழமை புத்தகாயா சென்று அங்கிருந்து நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சமாதான....

தொடர்பாகவும் இருவரும் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் ஜனாதிபதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனை சபையில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பங்குகொள்ள செய்வது குறித்தும் பேசப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க - தாம் இது தொடர்பாக கட்சியினருடன் ஆராய்ந்து பதில் கூறுவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா தமது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்ட பின்னர் சமாதான முயற்சிகளில் புதிய முனைப்புகள் எடுக்கப்படலாமெனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

### நாகர்கோவில்....

சிறப்புப் படையணியின் பொறுப்பாளரில் ஒருவரான தென்னரசன், கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த இளையவன் ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து மலர் வணக்கம் அகவணக்கம் இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து நினைவுரையினை லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து லெப். கேணல் ராகவனின் நினைவையொட்டி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி அணிகளான வடபகுதி, தென்பகுதி, மத்தியபகுதி ஆகிய அணிகளுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

அதில் லெப். கேணல் சேகர் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்ற வடபகுதி அணியே லெப். கேணல் ராகவன் தாச்சி சுற்றுக் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

ராகவன் கிண்ணத்தை வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் வழங்கிக் கௌரவித்தார்.

## நினைவுக்கல் திரைநீக்கம்!

கடந்த 28.08.1998 அன்று இருபாலைப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது, வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர் கப்டன் மாதவன் (கனகராசா சுமிதிரன், யாழ். மாவட்டம்) என்ற மாவீரரது திருவுருவப்படம் நேற்று மாலை 4 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு, நீர்வேலி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

முதலில் மாவீரது திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை தாயார் ஏற்றிவைக்க சகோதாரி மலர் மாலை அணிவித்தார். நினைவுரையினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி நிகழ்த்தினார். பி.ப. 5.00 மணிக்கு நினைவுக்கல்லை பெற்றார் திரைநீக்கம் செய்து வைத்தனர். இந்நிகழ்வில் போராளிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## பிரதேச செய்தியாளர்களுக்கான அவசர கலந்துரையாடல்!

**நமது ஈழநாடு பிரதேச செய்தியாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை (04/11/2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.**

**அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.**

**– பிரதம ஆசிரியர்.**

## மரண அறிவித்தல்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு நாகலிங்கம் 02.11.2004 செவ்வாய்க்கிழமை தனது 101 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகரட்ணம் மற்றும் சிவமணி, பேரின்பராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தையா நல்லையா ஆகியோரதும் ராஜீவினதும் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிக்கைகள் இன்று 03.11.2004 புதன்கிழமை மாலை 3 மணிக்கு துண்டி மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1 ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்*

**தகவல்: நா.பேரின்பராஜா (மகன்)**

UNIT
இன்று உதயமாகிறது

IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT & T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் இணைத் தயாரிப்பு நிறுவனங்களில் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாத சகல கணனி விற்பனை மற்றும் பழுது நீக்குதல், வலைப்பின்னலமைப்பு ஏற்படுத்துதல் மென்பொருள் உற்பத்தி, கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வழங்குகின்றோம்.

3 வருட முழு உத்தரவாதம்

விலை குறைவு என்பதற்காக தரம் குறைந்தவையல்ல தரம் மிகமிக உயர்ந்தவை

Attractive Opening Offer each computer purchase has

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

★ Computer Table
★ Filter ★ Dust Cover ★ Mouse Pad & etc.

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

- எவராலும் தீர்க்க முடியாத கணனிப் பிரச்சினைகளை பழுது பார்த்தல், நீக்குதல்
- சகல விதமான கணனிகளின் பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்
- Cisco நிறுவனத்தின் அனுமதி பெற்ற வலையமைப்புக்கள் மற்றும் திருத்தங்கள்
- LAN, WAN, MAN வலைப் பின்னலமைப்புகள், பழுது பார்த்தல் மற்றும் பழுது நீக்குதல்

இன்னும் பல .....

We delivers cheap & the best products Because We are entirely different from others

விசேட சலுகைப் பொதிகள்

புதிய Multimedia Pentium IV கணனிகள் Rs. 40,000/= முதல்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

புதிய Multimedia Compaq Pentium III கணனிகள் Rs. 25,000/= முதல்
ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

புதிய Multimedia Compaq Pentium II கணனிகள் Rs. 13,000/= முதல்
ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 3, 4 & 5 திகதிகள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாண சபை
# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நிகொட)
# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

திருகோணமலை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்ட முகாமைத்துவ காரியாலயத்திலும், மாவட்ட காரியாலயங்களிலும் கீழ்க்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது நிபந்தனைகள்

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும். திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகளவு பயணம் செய்யவேண்டியேற்படும்.

## வயதெல்லை

விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி 35 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும். 55 வயதிற்கு குறைந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 2004.11.19 திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம் / அரசகூட்டுத்தாபனங்கள் / சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

## தெரிவு செய்யப்படும் முறை

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### பிரதித் திட்டப் பணிப்பாளர்
### [02 வெற்றிடங்கள் திட்ட முகாமைத்துவ காரியாலயம் ]

## கடமைகளும் பொறுப்புகளும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

- திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.
- திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்திசெய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.
- திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வர வேண்டும்.
- திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத்தரத்தில் 08 வருடங்களுடன் 12 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

## அல்லது

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி / டிப்ளோமா) அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரகங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

## தொழில் சார் திறமைகள்

- சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.
- திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
- பலதரப்பட்ட ஒழுக்காற்று குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.
- திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
- திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.
- அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.
- கணனி அறிவு பெற்றிருத்தல்.
- ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர் மட்டத் தேர்ச்சி இருத்தல்.

## சம்பளம்

2000.12.26ந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

### நிதி முகாமைத்துவ நிபுணர்
### [01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் ]

## கடமைகளும் பொறுப்புகளும்

கணக்கீட்டு நடைமுறைகள் உள்ளக கட்டுப்பாடு உட்பட நிதி முகாமைத்துவ நடைமுறைகளை நிறுவுதல், அவற்றைப் பேணுதல், திட்டமிடுதல், பாதீடு, நிதி அறிக்கையிடும் நடைமுறைகள் , கணக்கீட்டு நடைமுறைகள் உட்பட பின்வருவன தொடர்பாக திருப்திகரமான நிலைப்பாட்டினைப் பேணுதல்

- ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளைப் பிரதிபலிக்கக்கூடியதாகவும் தொழிற்பாடுகள் தொடர்பாகப் பிரத்தியேக வழிகாட்டல்களுக்கமைய எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றியும் திட்டத்திற்கான வளங்களை செலவீனங்கள் மேற்கொள்வது தொடர்பாகவும் அறிவுரைகள் வழங்குதல்
- திட்டத் தொழிற்பாடுகளை முகாமைத்துவப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் ஏதுவாக சரியானதும் உரிய நேரத்திற்கு அவசியமானதுமான தகவல்களை வழங்குதல்
- கணக்களி தகைமையை உறுதி செய்வதுடன் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை திறமையான பயன்பாட்டிற்கு வழியமைத்தல்

## தேவையான தகமையும் அனுபவமும்

- நிதி முகாமைத்துவக் கணக்கீடு தொடர்பான உயர்பட்டதாரி ( MBA/MA) அல்லது அதற்கு சமமான தொழில்சான்றிதழ் ( உதாரணமாக CIMA/ACCA/ ICASL ) 10 முதல் 15 வருடங்கள் வரையிலான நிதித்துறை அல்லது வர்த்தகத்தொழிற்பாடு அல்லது அபிவிருத்தித்திட்டங்கள் ஆகியவற்றில் உயர்மட்ட பதவிக்குரிய தொழில் அனுபவம்

## தொழில் சார் திறமைகள்

- சர்வதேச கணக்கீட்டு நியமங்களிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறையிலும், கொள்வனவு நடைமுறையிலும் சிறந்த நடைமுறைக்கால அனுபவம்
- இலங்கையில் நடைமுறையிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் அரசதுறைக் கணக்கீட்டிலும் செலவினக்கட்டுப்பாட்டு நடைமுறையிலும் சிறந்த அறிவு
- திட்ட மட்டத்தில் அல்லது நிறுவன மட்டத்தில் கணக்கீட்டு நடைமுறை உருவாக்கம் ஆவணப்படுத்தல் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அனுபவம்.
- கணனி அறிவு பெற்றிருத்தல்.

## சம்பளம்

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

### தொழில்நுட்பப்பணிப்பாளர் பதவி
### [01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் ]

## கடமைகளும் பொறுப்புகளும்

கருத்திட்ட அமுலாக்கும் திட்டத்திலும், கடன் ஒப்பந்தத்திலும் விபரிக்கப்பட்ட திட்டத்தினை தயாரிப்பதிலும் கையாளுவதிலும் செயற்படுத்துவதிலும் தேவையான விசேட தொழில்நுட்பங்களை வழங்கவேண்டும்.

## தேவையான தகமையும் அனுபவமும்

குறைந்தது 15 வருட அனுபவத்தினைக்கொண்ட பட்டய எந்திரி

## தொழில்சார் திறமைகள்

- திட்டப்பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதோடு திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்ப சேவையை வழங்கும் ஆற்றல்
- திட்டமுகாமைத்துவப் பிரிவில் கிடைக்கும் பலவித திட்டங்களை தொழில்நுட்ப ரீதியாக கணிப்பிடும் ஆற்றல்.
- சேவைகளையும், வழங்கல்களையும், பொருட்களையும் பெற்றுகொள்வதற்கான அடிப்படையான அறிவைக்கொண்டிருப்பதோடு திட்டத்தினை சிறப்பானதுறையில் செயலாற்ற கண்காணிக்கும் ஆற்றல்.
- தனக்குரிய வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல்.
- கணனி அறிவு பெற்றிருத்தல்.
- எழுத்து மூலமாகவும், வாய்மூலமாகவும் திறமையாக தொடர்புகொள்ளும் ஆற்றல்.
- ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்குமான உயர்மட்டத் தேர்ச்சி.
- கேள்விகளை கணிப்பீடு செய்வதிலும் கொள்வனவு நடைமுறைகளிலும் அறிவினைக் கொண்டிருத்தல்.

## சம்பளம்

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

## சுகாதார நிபுணர் பதவி
## [01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் ]

### கடமைகளும் பொறுப்புகளும்

சுகாதார நிபுணர் திட்ட முகாமைத்துவப் பிரிவின் ஓர் பகுதியாகும். ஆனால், மாகாண சுகாதார திணைக்களத்திலிருந்து கடமை புரிவார். சுகாதார நிபுணர் சுகாதார நிர்வாகத்திலும், நோய் பரவாது தடுத்தலிலும், குணப்படுத்தலிலும் அனுபவம் வாய்ந்த வைத்தியதுறையில் தேர்ச்சியுடையவராயிருப்பார். அத்தோடு சுகாதார நிர்வாகத்திலும் மாவட்டங்களில் திட்டமிடல் முகாமைத்துவ ஆளணியின் மதிப்பைப் பெற்றவராயிருத்தல் வேண்டும். பின்வரும் பணிகளை அவர் / அவள் மேற்கொள்வார்.

❖ சுகாதார வசதிகளுக்கு ஆதாரமான திட்டங்களை திட்டமிடுவதிலும் செயற்படுத்துதலிலும் திட்டப்பணிப்பாளருக்கு ஆதரவாயிருத்தல்.

❖ பொதுச்சுகாதார தாதிமார்களையும், சுகாதார தொண்டர் வேலையாட்களையும் நியமனம் செய்வதிலும் பயிற்றுவிப்பதிலும் நிறுவனத்திற்கு உதவியாயிருத்தல்.

❖ சுகாதாரத் தொண்டர் வேலையாட்களுக்கான பாடத்திட்டத்தைத்தயாரிப்பதில் உதவியாயிருத்தல்.

❖ வைத்திய சுகாதார விடயங்களில் திட்டப்பணிப்பாளருக்கு தொழில்நுட்ப வழிகாட்டல்

❖ தண்ணீர், சுகாதாரதிட்டங்கள் செயல்படுத்தப்படும் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் பிரதேசசுகாதார சேவைகள் அத்தியட்சகரும் , மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களும், சுகாதார கல்வி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்து கொள்ளுதல்.

❖ சுகாதார விடயங்கள் சம்பந்தமான திட்டவேலைகளுக்கும், மதிப்பீடுகளுக்கும், ஆய்வுரைகளுக்கும் சுகாதார திணைக்களத்தின் ஆதரவினை பெற்றுக்கொள்ளுவதை ஒழுங்குபடுத்துவதும் , உறுதிபடுத்துவதும்.

❖ கால அட்டவணைக்கேற்பவும் நல்ல தரத்தினை பேணுவதற்காகவும் சுகாதார திட்ட நடவடிக்கைகள் ( பொது சுகாதார சேவைகள் மீளத்தாபித்தலும் வைத்திய வசதி மேம்பாடுகள் பொதுசுகாதார தாதிகள் பயிற்சி) செயற்படுத்துவதை உறுதிசெய்தல்.

❖ திட்டப்பணிப்பாளர் தமது திட்ட முன்னேற்ற அறிக்கையில் சேர்த்துக்கொள்ளுவதற்காக சுகாதார உபதிட்டங்களின் நிலைமைகளையும், தகவல்களையும் பேணிப்பாதுகாத்தல்

### தேவையான தகைமையும் அனுபவமும்

சுகாதார நிர்வாகத்திலும், நோய்வராது தடுப்பதிலும் , குணப்படுத்துதலிலும் உள்ள அனுபவத்துடனான வைத்திய கலாநிதிப்பட்டம். கணனி அறிவு பெற்றிருத்தல்.

### சம்பளம்

2000. 12. 26ந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

## மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் பதவி
## [02 பதவி வெற்றிடங்கள் மட்டக்களப்பு , முல்லைத்தீவு]

### கடமைகளும் பொறுப்புகளும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

○ திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.

○ திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்தி செய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயல்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

○ நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

○ திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வர வேண்டும்.

○ திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

### தேவையான தகமையும் அனுபவமும்.

நாடளாவிய சேவையின் 1ம் வகுப்பிலுள்ளோர் நியமனத்திற்கு தகுதி பெற்றவர்களாவர். பொருத்தமான 1ம் வகுப்பு விண்ணப்பங்கள் போதியளவு இல்லாத சந்தர்ப்பங்களில் நாடளாவிய சேவையின் 11/1 வகுப்பிலுள்ளோர் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவர்.

### தொழில்சார் திறமைகள்

○ சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.

○ திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.

○ பலதரப்பட்ட ஒழுக்காற்றுக் குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.

○ திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.

○ அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவாரயிருத்தல் வேண்டும்.

○ கணினி அறிவு பெற்றிருத்தல்.

○ ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர் மட்டத் தேர்ச்சி இருத்தல்.

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளமும் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் அமைவாக 2000. 12. 26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## கணக்காளர் பதவி II/I
## [04 பதவி வெற்றிடங்கள் திட்ட முகாமைத்துவ காரியாலயம், மட்டக்களப்பு , கிளிநொச்சி, அம்பாரை]

### கடமைகளும் பொறுப்புகளும்

நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும் பராமரிப்பதும் உள்ளக நிதிக்கட்டுப்பாடு, திட்டமிடுதல், வரவு செலவு திட்டத்தை தயாரித்தல், கணக்குகளை சரியாக அறிக்கை செய்தலும் கணக்காய்வு செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கேதுவாக தேவையான புத்தகங்களைத் தயாரிப்பதும் பராமரிப்பதும்.

### தேவையான தகைமையும் அனுபவமும்.

❑ இலங்கை அல்லது ஐக்கிய இராச்சிய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரிட்சை அல்லது உரிமத்தவர் பரிட்சை அல்லது

❑ ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1 , பகுதி 2 இல் சித்தி அல்லது

❑ ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1 , பகுதி 2 இல் சித்தி அல்லது

❑ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது

❑ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது

❑ அங்கிகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்ட தாரி அல்லது

❑ ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரிட்சையில் சித்தி

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளமும் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமமைவாக 2000. 12. 26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## உதவித்திட்டமிடல் பணிப்பாளர்
## [02 பதவிவெற்றிடங்கள் திட்ட முகாமைத்துவ காரியாலயம்]

### கடமைகளும் பொறுப்புகளும்

சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும் உபகருத்திட்டங்களையும் திட்டமிடுதலிலும் செயற்படுத்தலிலும் திட்டப்பணிப்பாளருக்கு உதவிசெய்யவேண்டும். உபகருத்திட்டங்களை செவ்வனே செயற்படுத்துவதற்கு தேவையான தகவல்களைத் திரட்டுதல், முன்னேற்ற அறிக்கைதயாரித்தல், அத்தோடு கருத்திட்ட யோசனைகளை தயாரிப்பதில் திட்டப்பணிப்பாளருக்கு உதவிசெய்யவேண்டும்.

### தேவையான தகைமைகளும் அனுபவங்களும்

அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் முதலாந்தர சித்தி அல்லது இரண்டாம்தர சித்தி பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது
அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது
அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பின்படிப்பு பட்டதாரி டிப்ளோமாவை உடையவராக இருத்தல் வேண்டும்.

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் அமைவாக 2000. 12. 26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5ற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## உள்ளகக்கணக்காய்வாளர்
## [01 பதவிவெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம்]

### கடமைகளும் பொறுப்புகளும்

நிதிமுகாமைத்துவம் செவ்வனே இருப்பதற்காக நிதிமுகாமைத்துவத்தின் உள்ளகக்கட்டுப்பாட்டிற்கு பொறுப்பாகவிருத்தல்.

### தேவையான தகைமைகளும் அனுபவங்களும்

❑ பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) அல்லது ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CACA) ஆரம்ப நிலையில் பகுதி 1 , பகுதி 2 இல் சித்தியும், தொழில்சார் நிலையில் பகுதி 1 இல் சித்தியும் இருத்தல் வேண்டும். அத்துடன் கணக்காய்வுத்துறையில் 3 வருட நிறைவேற்று தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

❑ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் / வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி, அத்துடன் கணக்காய்வு துறையில் 5 வருட நிறை வேற்று தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகமைகளுக்கும் அனுபவத்திற்குமமைவாக 2000. 12. 26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5ற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## நிர்வாக உத்தியோகத்தர்
## [01 பதவி வெற்றிடம் திட்டமுகாமைத்துவ காரியாலயம்]

### கடமைகளும் பொறுப்புகளும்

ஏற்புடைத்தான உரிய நடைமுறைகளுடன் காரியாலய நிர்வாக முறைமையை கொண்டு நடாத்துவதிலும் ஸ்தாபித்தலிலும் திட்டப்பணிப்பாளருக்கு உதவியாகவிருத்தல்

### தேவையான தகைமைகளும் அனுபவங்களும்

பொதுஎழுதுநர் சேவையின் அதிவிசேட தரம். விசேடமாக வெளிநாட்டு நிறுவனங்களினால் நிதிப்படுத்தப்படும் திட்டங்களில் செய்யப்படும் வழங்கல்கள் சம்பந்தமான அறிவு. அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் உதவி வழங்கும் தாபனங்களுடனும் கடிதமூல தொடர்பு கொள்ளுவதற்கான ஆங்கில அறிவு.

சி. ரங்கராஜா,
பிரதம செயலாளர்,
தலைவர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்)- திருகோணமலை.